பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2050 | ஆனி 06 வெள்ளிக்கிழமை 21.06.2019 | கதிர் 228

### இது ரகசியம் அல்ல!

கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்தும் விவகாரத்தை பல்வேறு அரசியல் தரப்புகளும் தத்தமது சுயநல அரசியல் தேவைகளுக்குக் கையில் எடுத்து அதனைக் குரங்கின் கைப் புண்ணாக்கியதுதான் மிச்சம் என்பதே எனது கணிப்பு. பக்கம் 02



### கூட்டமைப்புப் பேச்சை அடுத்து

# கல்முனைச் சிக்கல்; சுமுகமாகத் தீர்ந்தது

### தமிழ் பிரதேச செயலகத்தைத் தரம் உயர்த்த ஹக்கீமும் இணங்கினார் எனவும் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 21

அம்பாறை மாவட்டம், கல்முனை வடக்கு தமிழ் உப பிரதேச செயலகத்தை முழு அளவில் தனிப் பிரதேச செயலகமாக இயங்கச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு உடன் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு இனங்கியமையை அடுத்து அவ்விடயத்தை ஒட்டி எழுந்த சிக்கலுக்கு சுமுகமான இணக்கத் தீர்வு எட்டும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. பக்கம் 11

## 'கல்முனை வடக்கு' என தமிழருக்கு வேண்டாம்!

### ஏட்டிக்குப் போட்டியாக முஸ்லிம்களும் களத்தில்





அம்பாறை, ஜூன் 21

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த வேண்டாம் எனக் கோரி கல்முனை பக்கம் 11

## கல்முனை வடக்கு செயலக கோரிக்கை நியாயமற்றது!

### சபையில் கூறினார் ஹரிஸ்

கொழும்பு, ஜூன் 21

கல்முனை வரலாற்றில் இன ரீதியாக எந்த முரண்பாடுகளும் ஏற்பட்டதில்லை. தேரர்கள் இப்போது பக்கம் 11

## நாடாளுமன்ற சபை செயற்பாடு சில நிமிடங்கள் இடைநிறுத்தம்

### கோரம் இல்லாதமையே காரணம்

கொழும்பு, ஜூன் 21

சபையில் கோரம் (தேவையான உறுப்பினர்கள்) இல்லாதபடியால் விவாதம் நடத்துவது எப்படி பக்கம் 11

## முடங்கியது கிழக்கு

மட்டக்களப்பு, ஜூன் 21

கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்தக் கோரி நடத்தப்படும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து, கிழக்கு மாகாணத்தில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் கிழக்கு மாகாண தமிழ் பகுதிகளில், இயல்பு நிலை பக்கம் 02

## எல்லோரும் எங்களை கைவிட்டுவிட்டார்கள்

### சிவசக்தி ஆனந்தன் எம்.பியிடம் மகஸின் தமிழ்க் கைதிகள் விசனம்



கொழும்பு, ஜூன் 21

தமது விடுதலைக்காக யாரும் முயற்சிக்கவில்லையென மகஸின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் பக்கம் 11

## அரச ஊழியர்களுக்கு மங்கள வழங்கும் மகிழ்ச்சிச் செய்தி!



கொழும்பு, ஜூன் 21

அரச ஊழியர்களுக்கு அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் வழங்கப்படவுள்ள 2 ஆயிரத்து 500 பக்கம் 11

# இலங்கையின் இனப்படுகொலைகளுக்கு சர்வதேச விசாரணை கோருகிறது கனடா!

### பிரேரணை அந்நாட்டு நாடாளுமன்ற நிலையியல் குழுவில் நிறைவேற்றம்

ஒட்டாவா, ஜூன் 21

இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதென்ற குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகச் சுதந்திரமான, சர்வதேச விசாரணை ஒன்று தேவையெனக் கோரும் பிரேரணை கனேடிய நாடாளுமன்றத்தின் வெளியுறவு, சர்வதேச அபிவிருத்தி ஆகியன தொடர்பான நிலையியல் குழுவில் நேற்று முன்தினம் நிறைவேற்றப்பட்டது. பக்கம் 11

## கல்விச் செயலராக இளங்கோவன் ஆளுநரின் செயலராக சத்தியசீலன்

### ஜூலை 1 முதல் நடைமுறைக்கு





யாழ்ப்பாணம், ஜூன் 21

வடக்குமாகாணக்கல்வி அமைச்சின் புதிய செயலாளராகமுன்னர்ஆளுநரின் செயலாளராகப் பதவி வகித்த பக்கம் 02

## 'கல்முனை வடக்கைத் தரமுயர்த்து' அத்துரலிய தேரரும் களமிறங்கினார்





அம்பாறை, ஜூன் 21

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தை முழு அதிகாரமும் கொண்ட பிரதேச செயலகமாகத் தரமுயர்த்துமாறு கோரி குறித்த உப பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட சாகும்வரையி பக்கம் 11

## தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கு இனச்சாயம் பூசுவது நியாயமற்றது

### கல்முனைப் போராட்டம் குறித்து மனோ



கொழும்பு, ஜூன் 21

கல்முனை வடக்கு பிரதேச பிரச்சினை இன்று தமிழ் – முஸ்லிம் ஐக் பக்கம் 02

# விசாரணைகளைத் துரிதமாக்க ஜனாதிபதி மைத்திரி பணிப்பு

கொழும்பு, ஜூன் 21

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் பின்னர் சிறு குற்றங்கள் தொடர்பில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ளவர்களின் விசாரணை நடவடிக்கைகளை துரிதப்படுத்திப் பயங்கரவாதச் செயற்பாடுகளுடன் தொடர்பற்ற அனைவரையும் விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு துறையினருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

தேசிய பாதுகாப்புச் சபை நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடியபோதே அவர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

இதுதொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமைகள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளும் இதன்போது மீளாய்வு செய்யப்பட்டன.

சமய நிகழ்வுகள் மற்றும் பொதுமக்கள் சந்திப்புகள் நடைபெறும் இடங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது தெளிவுபடுத்தினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய உள்ளிட்ட ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி ஆகியவற்றின் மக்கள் பிரதிநிதிகளும் பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி, முப்படை தளபதிகள், புலனாய்வுத் துறை பிரதானிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர் உள்ளிட்ட பாதுகாப்பு துறையின் மூத்த அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர் – என்றுள்ளது.

இதேவேளை, ஏப்ரல் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களையடுத்து நாடுமுழுவதும் 2 ஆயிரத்து 289 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவர்களில் 200இற்கும் மேற்பட்டோர் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இன்று ‘மீளும் ஆளுமை’ நிகழ்ச்சித்திட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஜூன்21

இன்று இடம்பெறவுள்ள 5ஆவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் மாணவர்களின் ஆளுமைத் திறன்களை மேம்படுத்து நிகழ்ச்சித் திட்டமான ‘மீளும் ஆளுமை’ எனும் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விழா மண்டபத்தில் இன்று காலை 8.00 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் பிரதம அதிதியாக கலந்து நிகழ்வை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

‘மீளும் ஆளுகை’ நிகழ்ச்சித்திட்டம் மாணவர்களின் உளம்சார் திறன்களை மேம்படுத்துவதையும் பலப்படுத்துவதையும் இலக்காகக் கொண்டு எவ்வாறான சவால் மிக்க சூழல்களிலும் தமது ஆளுமைகளை அவர்கள் மேம்படுத்திக்கொள்வதை முக்கிய கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டம் வடமாகாணக் கல்வித்திணைக்களத்தின் ஒத்திசைவுடன் நடைமுறைப்படுத்தப்படுவதுடன், வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் தொலைநோக்கின் முக்கிய அம்சமான ஆன்மீக ஆரோக்கியம் சார்ந்த நிகழ்ச்சித்திட்டமாகவும் அமைகிறது. இது வடமாகாண மாணவர் சமூகத்தின் ஆளுமை மேம்பாட்டில் முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த வருடம் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட தேவையுடைய மாணவர் வாழ்வியலில் யோகாவின் பங்கு எனும் நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## தமிழ் மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியத்தின் மையப்புள்ளியாக மாறியுள்ளது. எனவே கல்முனை வடக்குஉப–பிரதேசசெயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்தும் நீண்டகால கோரிக்கைக்கு உடன்பட்டு முஸ்லிம் அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், மக்கள் பிரதிநிதிகள் தமிழ்–முஸ்லிம் ஐக்கியத்தை உறுதிப்படுத்த வேண்டும். தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் போது மாத்திரம், அதற்கு இன, மத சாயம் பூசுவதில் என்ன நியாயம் இருக்கிறது என எனக்கு விளங்கவில்லை.

– இவ்வாறு கோரிக்கை விடுத்திருக்கிறார் அமைச்சர் மனோ கணேசன்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

கல்முனை வடக்கு பிரதேசம், சாய்ந்தமருது பிரதேசம், கல்முனை தெற்கு பிரதேசம் ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதுதான் கல்முனை மாநகரசபையாக இருக்கின்றது. இதில் சாய்ந்தமருது, கல்முனைதெற்கு ஆகிய பிரதேசங்களில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக இருக்கும் போது, கல்முனை வடக்கு பிரதேசத்தில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கிறார்கள்.

இந்நிலையில் சாய்ந்தமருது பிரதேசம், ஏற்கனவே தனியொரு பிரதேச செயலகமாக மாற்றப்பட்டு, இன்று சாய்ந்தமருது பள்ளிவாசல் தலைவர்கள் தலைமையில் அங்கு வாழும் முஸ்லிம் மக்கள், தமது பிரதேச செயலக பிரதேசத்தை, கல்முனை மாநகர சபைக்கு முற்றிலும் வெளியே பிரித்தெடுத்து முழுமையான நகரசபையாக்கும்படி போராடுகிறார்கள். அதுபோல் கல்முனை வடக்கு தமிழ் சமூக தலைவர்கள் தமது உப பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்த கோரி கடந்த பல்லாண்டுகளாக போராடுகிறார்கள்.

ஒரே இனத்தைச் சேர்ந்த முஸ்லிம் மக்கள், கல்முனை மாநகரசபையில் இருந்து முற்றாகப் பிரிந்து தனி நகர சபை வேண்டும் என போராடும் போது, சகோதர இனத்தைச் சார்ந்த தமிழ் மக்கள், தமது உப பிரதேச செயலகம், முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர வேண்டும் எனப் போராடுவதில் என்ன தவறு இருக்கின்றது என இந்தக் கல்முனை வடக்குத் தமிழர்களின் போராட்டத்தை எதிர்க்கும் அரசியல்வாதிகள் நாட்டுக்கும், அரசுக்கும் தர்க்கரீதியாக எடுத்து கூற வேண்டும்.

இந்த விடயம் தொடர்பில் தேசிய பாதுகாப்புச் சபையிலும், நாம் கருத்துகளை பரிமாற்றிக் கொண்டோம். அம்பாறையில் கல்முனை வடக்கு உப – பிரதேச செயலகத்தை, முழுமையான பிரதேசசெயலகமாகதரமுயர்த்தக் கோரி உண்ணாவிரத சாத்வீக போராட்டத்தில் ஈடுபட்டுள்ள போராளிகள், தேரர், சுவாமிகள் மற்றும் ஏனையோர் என்னுடன் தொலைபேசியில் நேற்று முன் தினம் பிற்பகல் உரையாடினர்.

அத்துடன் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மக்கள் என்னைச் சந்தித்து இதுபற்றி தீர்க்கமாக உரையாடியுள்ளனர். இப்பிரச்சினை தொடர்பில், துறைசார் அமைச்சர் வஜிர அபேவர்தனவுடனும், நான் தேசிய ஒருமைப்பாட்டு துறைசார் அமைச்சர் என்ற முறையில் கலந்தாலோசித்துள்ளேன். அம்பாறை மாவட்ட அமைச்சரவை அமைச்சர் தயா கமகேயும், நானும் இதுபற்றி பேசியுள்ளோம். இதை இனியும் தொடர்ந்து நீடிக்க விடுவது நாட்டின் தேசிய ஒருமைப்பாட்டுக்கு குந்தகமாக அமைந்துவிடும் என இவர்களுக்கு தெரிவித்துள்ளேன்.

இன, மத அடிப்படைகளில் கல்வி வலய, பிரதேச செயலக, உள்ளூராட்சிமன்ற எல்லைகளை நிர்ணயிப்பது தொடர்பில் மாறுபட்ட கருத்துகள் இருந்தாலும் இன்று வடக்கு கிழக்கு மாகாணங்களின் பல்வேறு மாவட்டங்களில், இன அடிப்படையிலான பிரதேச செயலகங்கள், கல்விவலயங்கள், நிலத்தொடர்பற்றும், நிலத்தொடர்புடனும் நடைமுறையில் இருக்கின்றன.

எனவே கல்முனை வடக்கு தமிழ் மக்கள், தமது உப – பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாக தரமுயர்த்த கோருவதில் மாத்திரம் என்ன தவறு இருக்கிறது என எனக்கு விளங்கவில்லை. அத்துடன் ஏற்கனவே இயங்கி வரும் ஓர் உப – பிரதேச செயலகத்தையே, முழு – பிரதேச செயலகமாக தரமுயர்த்தும்படி இக்கோரிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. இது பிழை என்றால், கிழக்கில் இருக்கும் எத்தனையோ இனரீதியான பிரதேச செயலகங்களை, கல்வி வலயங்களை கலைக்க வேண்டும். தமிழ் மக்கள் தமது கோரிக்கைகளை முன்வைக்கும் போது மாத்திரம், அதற்கு இன, மத சாயம் பூசுவதில் என்ன நியாயம் இருக்கிறது என எனக்கு விளங்கவில்லை.

இன்று தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் இனத்தவர் மத்தியில் கிழக்கில் இந்த பிரச்சினை மெல்ல, மெல்லப் பூதாகரமாகி கொண்டு வருகிறது. இதை பார்க்காமல், கேட்காமல், ஆராயாமல் இருப்பது பொறுப்பற்றமையாகும். மேலும் இனங்களிடையே சச்சரவு புள்ளிகளை அடையாளம் கண்டு நிவர்த்திக்கும், தேசிய ஒருமைபாடும், ஏனைய பொறுப்புகளுக்கு மத்தியில், ஒரு பொறுப்பாக எனக்கு இருக்கிறது என்பதையும் நான் மனதில் கொண்டுள்ளேன். இந்த பிரச்சினையினால் கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் இன நல்லுறவு சீர்கெடுவதை இனியும் வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க முடியாது – என்றார். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்கு தமிழ் – முஸ்லிம் தலைவர்களே இதைப் பேசித் தீர்த்திருக்க வேண்டும்.

பல தரப்புகளையும் உள்ளே இழுத்து விட்டு, குளத்தைக் கலக்கியாயிற்று. பருந்து போல பறந்து வந்து இதற்குள் தலையை நீட்டும் தரப்புகளிடம் விடயத்தைக் கொடுத்து ஏமாறாமல் இருந்தால் சரிதான்.

‘ஏறச் சொன்னால் எருதுக்குக் கோபம்; இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்’ – என்ற கதை மாதிரியான விடயம்தான் இது.

கல்முனையில் சனத்தொகை எண்ணிக்கையில் முஸ்லிம்கள் தமிழர்களைவிட அதிகம். ஆனால் நில வாரியாகப் பார்த்தால் தமிழர்களின் பிரதேசமாக இருக்கும் காணிகள் விஸ்தீரணத்தில் அதிகம். அங்கு முஸ்லிம்கள் குறுகிய பிரதேசத்துக்குள் செறிந்து வாழுகின்றனர்.

அதிக எண்ணிக்கையும் குறைந்த விஸ்தீரணமும் உள்ள பகுதியை கல்முனை பிரதேச செயலகமாக இருக்கவிட்டு, கூடிய நில விஸ்தீரணமும் குறைந்த சனத்தொகையும் கொண்ட கல்முனைவடக்குத்தமிழ்ப்பிரதேசத்தை தனிப் பிரதேச செயலகமாகப் பிரித்துத் தனித்து இயங்க முழு அளவில் இடமளிப்பது முஸ்லிம்களின் மனதை இடறுகின்றது போலும்.

தமிழ் – முஸ்லிம் தலைவர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நின்று இழுபறிப்படாமல் இதனைத் தீர்த்திருக்கலாம்.

அதுவும், ஈஸ்டர் ஞாயிறுத் தாக்குதலை அடுத்து முஸ்லிம்களுக்கு எதிரான காழ்புணர்ச்சியும், எதிர்ப்பும் தெற்கில் கொளுந்து விட்டு எரியும்போது –

இதுவரை, இது விடயத்தில் அலட்டிக் கொள்ளாத புத்த பிக்குகளையும் துணைக்குச் சேர்த்துக் கொண்டு, வாரிக்கட்டி இப்படிப் போராட்டத்தில் இறங்கியமை சரிதானா என்று தமிழர்கள் சிந்தித்திருக்க வேண்டும்.

கல்முனைக்குத் தனித்தமிழ்ப் பிரதேச செயலகத்துக்காக காவியுடையையும் சுருட்டிக் கொண்டு தமிழர் தரப்போடு களமிறங்கியிருக்கும் பௌத்த, சிங்களப் பேரினவாதத்திடம் ஒரு தடவை வடக்கு – கிழக்கு இணைப்பு விடயத்தில் எப்படி அவர்கள் நடந்து கொள்வார்கள் என்று தமிழர் தரப்பு நேரத்துடன் கேட்டு வைத்துக் கொள்வது நல்லது.

தமிழரின் உரிமைப் போராட்டத்தை முறியடிக்க இதே முஸ்லிம்களை எமக்கு எதிரான போடுதடியாகப் பாவித்த இதே பௌத்த சிங்கள பேரினவாதக் காவியுடைகள், வடக்கு – கிழக்கு இணைப்பு என்று வரும்போது, இதேபோல கொட்டில் போட்டு முஸ்லிம்களுடன் சேர்ந்து எமக்கு எதிராக உண்ணாவிரதப் படுக்கையில் இருக்கும் என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்து கொள்வது நல்லது.

முஸ்லிம் தலைவர்களும் கூட, நாட்டில் தமக்கு எதிராகக் கிளர்ந்துள்ள சூழலைப் புரிந்து கொண்டு நாங்கள் எல்லாம் சிறுபான்மையினர் என்ற வகையில் தமிழருடன் ஓரணி சேர முனைந்திருந்தால் நல்லது.

கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலக விடயத்தில் தமிழர்களையும் அரவணைத்து நடப்பதன் மூலம் கிழக்கில் முஸ்லிம் – தமிழர் ஒற்றுமையை வலுப்படுத்தி, பொது எதிரியான பௌத்த, சிங்களப் பேரினவாதத்தை எதிர் கொண்டிருக்கலாம்.

தமிழரின் உரிமைப் போராட்டத்தின் போதும் சரி, இப்போது முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வலைகள் கிளர்ந்தெழும்போதும் சரி, பிரித்தாளும் தந்திரத்தை தென்னிலங்கை கனகச்சிதமாக முன்னெடுப்பதாகவே நான் நினைக்கிறேன்.

பாவம் தமிழரும், முஸ்லிம்களும். அவர்களின் தலைவர்களின் சுயநல அரசியல் அணுகுமுறையால் பிளவுபட்டு நின்று வாங்கிக் கட்டப் போகின்றார்கள்.

அதன் விளைவை அவர்கள் உணர்வதற்கு நீண்ட காலம் தேவைப்படாது என்பதுதான் எனது கணிப்பு. பொறுத்திருந்து பார்ப்போமே....!

★ ★ ★

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் தொடர்பாக விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் நேற்று மாலை சுவாரஸிய மான ஒருவர் சாட்சியமளித்தார்.

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவரான அவர் முஸ்லிம் மதத்தை விட்டு விலகியவர் எனத் தம்மை அடையாளப்படுத்தினார்.

1980 – 1990 காலப்பகுதியிலும், பின்னரும் 9, 10 ஆம் வகுப்பில் கல்வி போதிப்பதற்காக அரசினால் அச்சிட்டு வழங்கப்பட்ட இஸ்லாமிய பாடநூல்களின் சில பகுதிகளை அவர் முன்வைத்தார்.

இஸ்லாமை விட்டு மதம் மாறியவர் கொல்லப்பட வேண்டும் என்றும், ‘துரோகி’ என்றும் அதில் கூறப்பட்டிருந்தது.

இப்படிப் பாடநூலை அரசே வழங்கினால் இவ்வாறு வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடக்காமல் வேறு என்ன நடக்கும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

தாக்குதல் சூத்திரதாரியான சஹ்ரானின் நடமாட்டங்கள் குறித்து தெளிவான தகவல்களை வழங்கியும் அவர் மீது பாதுகாப்புத் தரப்பு நடவடிக்கை எடுக்காமல் அசிரத்தை காட்டிய விடயத்தை தெஹ்ஹீத் ஜமாத்தின் பிரதிநிதி ஒருவர் நேற்றுப் புட்டுப் புட்டு வைத்தார்.

மொத்தத்தில் நேற்று மாலை 5 மணி நேரம் நடந்த இந்த விசாரணை சுவாரஸியமான பல தகவல்களை அம்பலப்படுத்தியதாக செய்தியாளர்கள் கூறினர். இன்னும் எத்தனை விடயங்கள் இவ் விசாரணையில் வெளிவரப் போகின்றனவோ தெரியவில்லை.

- மின்னல் -

## கல்விச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எல். இளங்கோவன் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனால் நேற்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் எதிர்வரும் ஜுலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை –

இதுவரை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளராக இருந்த எஸ். சத்தியசீலன் வடக்கு மாகாண ஆளுநரின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனமும் ஜுலை முதலாம் ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முடங்கியது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடங்கியது.

இந்த ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்கும் முகமாக கிழக்கு மாகாணம் முழுவதும் அனைத்து வர்த்தக நிலையங்கள், அரச மற்றும் அரச சார்பற்ற காரியாலயங்கள் மூடப்பட்டிருந்தன. அரச மற்றும் தனியார் போக்குவரத்து சேவைகள் அனைத்தும் முடங்கின. மாணவர் வரவு இன்மையால் பாடசாலைகள் வெறிச்சோடியிருந்தன. (ஐ)

# மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களின் பாதுகாப்பு இனி ஓய்வுபெற்ற ராணுவத்திடம்!

## எதிர்ப்பு வெளியிடத் தயாராகின்றது கூட்டமைப்பு

கொழும்பு, ஜூன் 21

நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் தனியார் பாதுகாப்பு நிறுவன ஊழியர்கள் நீக்கப்பட்டு அந்த இடத்துக்கு ஓய்வு பெற்ற இராணுவத் தினரை நியமிப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதற்கான சுற்றறிக்கை உள்நாட்ட லுவல்கள் அமைச்சினால் மாவட்ட செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டு வருகின்றது.

மாவட்ட செயலகங்கள், பிரதேச செய லகங்களின் பாதுகாப்புப் பணிகளில் இனிமேல் ஓய்வுபெற்ற இராணுவத் தினர், சிவில் பாதுகாப்புப் படையணியி னர் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

வடக்கிலுள்ள சில மாவட்ட செயல கங்களுக்கும் இந்தச் சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்படுகின்றது.

அரசின் இந்த முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அதிருப்தியடைய வைத் துள்ளது. இந்த நடவடிக்கைக்கு எதிர்ப்பு வெளியிடத் தீர்மானித்துள்ள கூட்டமைப்பு பிரதமரைச் சந்திக்கவுள்ளது. அடுத்த சில தினங்களில் இந்தச் சந்திப்பு இடம் பெறுமெனத் தெரியவருகின்றது. (ஐ)

## 2 ஆவது சதொச கிளை முல்லைத்தீவில் திறப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தின் இரண்டாவது லங்கா சதொச கிளை நேற்றுப் புதுக்குடியிருப்பில் திறந்து வைக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பு – பரந்தன் வீதியில் அமைக்கப் பட்டுள்ள இந்த சதொச கட்டடத் திறப்பு விழா நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு சதொச நிறுவனத்தின் வடக்கு மாகாண முகாமையாளர் றஸ்மின் கலீல் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிலையத்தை லங்கா சதொச நிறுவனச் செயற்றிட்ட முகாமையாளர் ரணசிங்க பண்டார மற் றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இந்த நிகழ்வில் புதுக்குடியிருப்பு கந்தசாமி ஆலயத் தின் செந்தில்நாத குருக்கள், புதுக்குடியிருப்பு சூசை யப்பர் ஆலயப் பங்குதந்தை எஸ். சுதர்சன் ஆகி யோர் ஆசியுரை வழங்கினர். (ஐ)

## பாரவூர்தி பள்ளத்தில் பாய்ந்து இருவர் காயம்

கொழும்பு, ஜூன் 21

10 தொன் தேயிலைத் தூள் ஏற்றிச்சென்ற பாரவூர்தி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள் ளானதில் இருவர் காயமுற்றனர் என கினிகத்தேனைப் பொலிஸார் தெரிவித்தனர்

டயகமயிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற பாரவூர்தியே ஹற் றன் – கொழும்பு பிரதான வீதியின் கினிகத்தேனை பகுதியில் நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது

மழை காரணத்தில் பாதையில் விலகிச் சாரதியின் கட்டுப்பாட்டை மீறி பாரவூர்தி 50 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதாக கினிகத்தேனை பொலிஸார் கூறி னர். (ஐ)

## கம்போடியா பயணத்தை ரத்துச் செய்தார் மைத்திரி



கொழும்பு, ஜூன் 21

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன கம்போ டியா, லாவோஸ் நாடுக ளுக்கு இந்த மாத இறுதி யில் மேற்கொள்ளவிருந்த பயணத்தை திடீரென ரத்துச் செய்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின் றன.

எதிர்வரும் 26ஆம் திகதி தொடக்கம், கம்போடியா வுக்கும் லாவோஸுக்கும் பயணம் மேற்கொள்வ தற்கு ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன திட்ட மிட்டிருந்தார்.

எனினும், அவரது இந்தப் பயணத் திட்டம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக வும், எதிர்வரும் ஒகஸ்ட் மாதமே அவர் இந்தப் பய ணத்தை மேற்கொள்ளவுள் ளார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## சு.கவிலிருந்து தாவியோருக்கு கட்சி உறுப்புரிமை வழங்குகிறது ஐ.தே.க.!

கொழும்பு, ஜூன் 21

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவு வழங்கிய நாடாளுமன்ற உறுப் பினர்களுக்கு கட்சி உறுப்புரி மையை வழங்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐ.தே.கவின் மத்தியசெயற் குழுக் கூட்டம் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க தலைமையில் கட்சி தலைமையகமான சிறி கொத்த வில் நேற்றுமுன்தினம் கூடியது.

ஜனாதிபதித் தேர்தல், தொகுதி அமைப்பாளர் நியமனம் உட்பட முக்கிய சில விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப் பட்டுள்ளன.

இதன்படி ஐ.தே.கவுக்கு ஆத ரவு வழங்கிவரும் விஜித் விஜித முனி சொய்சாவுக்கு கட்டான தொகுதி அமைப்பாளர் பதவி யையும், அமைச்சர் சம்பிக்க ரண வக்கவுக்கு மஹரகம தொகுதி அமைப்பாளர் பதவியை வழங்கு வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதற்கு ஒரு சிலர் எதிர்ப்பை வெளியிட்டாலும் பெரும்பாலான உறுப்பினர்கள் பச்சைக்கொடி காட்டியுள்ளனர் என தெரியவரு கின்றது.

அத்துடன், ஐ.தே.கவின் முன் னாள் மாகாணசபை உறுப்பினர் ஒருவரின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள் ளது.

அதேவேளை, ஜனாதிபதித் தேர் தலில் ஐக்கிய தேசியக் கட்சி வேட் பாளர் ஒருவரே, பங்காளிக்கட்சிக ளின் ஆதரவுடன் பொதுவேட்பாள ராகப் போட்டியிடவேண்டும் எனவும் செயற்குழு கூட்டத்தில் முடிவெடுக் கப்பட்டது எனத் தெரியவருகின் றது.

## வாக்காளர் பதிவுகளை உடனே மேற்கொள்க!

### யாழ். உதவித் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

இதுவரை வாக்காளர் கணக்கெடுப்புப் படிவங் களைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் உடனடியாக அதனைப் பெற்றுக் கொண்டு தங்கள் வாக்குரி மையை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு அறிவு றுத்தப்பட்டுள்ளனர்.

ஒவ்வொருவரும் தத்தமது கிராம அலுவலகர் ஊடாக அப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் இ.அமல்ராஜ் தெரிவித்துள்ளார்.

வாக்காளர் கணக்கெடுப்பு படிவங்கள் பெறுவதில் சிக்கல்கள் உள்ளவர்கள் உடனடியாக முறைப் பாடுகளைப் பதிவு செய்யுமாறு அவர் கேட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 15ஆம் திகதியில் இருந்து ஜூன் மாதம் 14ஆம் திகதிவரைக்கும் வாக்காளர் கணக் கெடுப்பு படிவம் விநியோகிக்கப்பட்டது. இருப்பினும் அப்படிவங்கள் உரிய முறையில் தம்மை வந்தடைய வில்லை என்று சில முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அந்தப் படிவத்தை இதுவரை பெற்றுக் கொள் ளாதவர்கள் அல்லது கிடைக்காதவர்கள் உடனடியாக தத்தமது கிராம அலுவலரிடம் அந்தப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

வாக்காளர் கணக்கெடுப்பு படிவம் பெற்றுக் கொள்வதில் பிரச்சினைகள் இருப்பின் யாழ்.மாவட்ட தேர்தல் அலுவலகத் தொலைபேசி இலக்கமான 021 2222655 என்னும் இலக்கத்திற்கும், 0212228002 என்ற தொலை நகல் இலக்கத்துக்கும், யாழ்.மாவட்ட அரச அதிபரின் முறைப்பாட்டு இலக்கமான 021 2225000 என்ற தொலைபேசி இலக்கத்துக்கும் தொடர்பு கொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்ய முடியும். கிடைக்கும் முறைப்பாடுகள் தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டும் என்று உதவித் தேர்தல் ஆணையாளர் கூறினார். (ஐ – 07)

## ஐ.நா. அபிவிருத்தித் திட்டப் பணிப்பாளர் வடமாகாண ஆளுநருடன் நேற்று சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 21

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் ஜோய்றின் சொய்றின் சன் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனை நேற்று முற்பகல் ஆளுநர் செயலகத்தில் சந்தித் தார்.

இந்தச் சந்திப்பின்போது ஐக்கிய நாடுகள் அபி விருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினால் வடக்கு மாகாணத் தில் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் தொடர் பில் ஆளுநருக்கு விவரிக்கப்பட்டது.

போரினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட மாகாணமாக வடக்கு மாகாணம் காணப்படுவதால் இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தைப் பொருளாதார ரீதியாக உயர்த்தக்கூடிய திட்டங்க ளைச் செயற்படுத்துமாறு ஆளுநர் கோரிக்கை விடுத் தார்.

இதேவேளை, வடமாகாண மக்கள் எதிர்கொண்டு வரும் நீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்னெ டுக்கும் வடமராட்சிக் களப்பு திட்டம் உள்ளிட்ட செயற் திட்டங்கள் தொடர்பில் குறிப்பிட்ட ஆளுநர், இதற்கு உதவி புரியுமாறும் கோரிக்கை விடுத்தார்.

மேலும், இந்தியாவில் வாழ்ந்துவரும் இலங்கை அகதிகள் தொடர்பில் குறிப்பிட்ட ஆளுநர், அந்த அகதி களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வருவதற்கு ஐ.நா. உதவிபுரிய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online


## நாடாளுமன்ற விவாதத்தால் பயன் உண்டா?

**இனப் பிரச்சினைக்கான தீர்வு தாமதமாகின்றமை குறித்து நாடாளுமன்றத்தில் இரண்டு நாள் விவாதம் நடத்தக் கோருவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தீர்மானித்திருக்கின்றது.**

**இப்படி இரு நாள் விவாதம் நடத்துவதற்கான வாய்ப்பை கூட்டமைப்பு பெற்றுக் கொள்ளுமா, அதற்குச் சபாநாயகர் தலைமையில் கூடும் நாடாளுமன்றக் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் அனுமதி கிடைக்குமா, காலதாமதமின்றி அத்தகைய விவாதத்துக்கு வாய்ப்புக் கிட்டுமா என்பவை எல்லாம் நேற்று இந்தப் பத்தி எழுதப்படும் போது தெரியவில்லை.**

**காலதாமத இழுபறிக்குப் பின்னராவது அதற்கு வாய்ப்புக் கிட்டும் என நம்பலாம்.**

**ஆனால், அத்தகைய விவாதம் நடத்துவதால் என்ன சாதித்து விட முடியும், ஏதேனும் புதிதாகக் கிட்டி விடுமா என்று கேட்டால் நம்பிக்கையீனமான பதில்தான் கிடைக்கும்.**

**இன்றைய நிலையில் – ஏமாற்றத்தின் உச்சியில் – ஆற்றாண்மையின் விளைவாக – முன்னெடுக்கப்படும் ஒரு நடவடிக்கையாகத்தான் இதனைப் பார்க்க முடியும்.**

**பெரிய எதிர்ப்பார்ப்புடனும், அதீத நம்பிக்கையுடனும்தான் ஜனாதிபதி மைத்திரிபாலவையும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நல்லாட்சி அரசையும் தாழும் சேர்ந்து அதிகாரத்துக்கு – ஆட்சிப் பீடத்துக்கு – கொண்டு வந்தார்கள் தமிழர்கள்.**

**ஆனால், ஆட்சிக்கும் அதிகாரத்துக்கும் வந்த பின்னர் வழமையான தென்னிலங்கை பௌத்த, சிங்கள ஆட்சியாளர்கள் போல தமிழர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளைக் காற்றில் பறக்கவிட்டு விட்டு – அவர்களை ஏமாற்றி நட்டாற்றில் தவிக்க விட்டு விட்டு – தம் வேலையைப் பார்க்கின்றனர் ஜனாதிபதியும் அரசுத் தரப்பினரும்.**

**இந்த ஏமாற்ற வெப்பியாரத்தின் உச்சத்தில், அதனைக் கொட்டித் தீர்ப்பதற்கான ஒரு வடிகாலாகவே இந்த விவாதத்தைக் கூட்டமைப்பு கோருகின்றது என்பது வெளிப்படையானது.**

***“இனப் பிரச்சினைக்கு இணக்கமான சுமுகத் தீர்வு எட்டுவதற்கு விடுதலைப் புலிகளே முட்டுக்கட்டை என்று தென்னிலங்கையால் முன்னர் திரும்பத் திரும்பக் கூறப்பட்டு வந்தது. ஆனால், இப்போது இராணுவ ரீதியில் புலிகள் முறியடிக்கப்பட்டு பத்து ஆண்டுகள் கடந்து விட்டன. எனினும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு காணப்படவில்லை. காணப்படும் என்ற நம்பிக்கையும் அருகி வருகின்றது. தீர்வுக்கான இணக்கமும் வாய்ப்பும் இந்த நாடாளுமன்றத்திலேயே உருவான பின்னரும், அது நடைமுறைக்கு வராமல் போனமைக்கு யார் காரணம் என்ற கேள்வியின் அடிப்படையில் இத்தகைய விசேட விவாதம் அவசியமாகின்றது.”*** **– எனக் கூட்டமைப்பின் பக்கத்தில் விளக்கம் கூறப்படுகின்றது.**

**அது சரியானதே. ஆனால் இத்தகைய விவாதத்தினால் என்ன பயன் – லாபம் – என்ற கேள்வியும் கூட நோக்கப்பட வேண்டியுள்ளதாக இருக்கின்றது.**

**இந்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலத்தில் இனப் பிரச்சினைத் தீர்வையும் உள்ளடக்கிய ஒரு புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சி கணிசமான அளவு முன்னேறியிருந்தது. அந்தப் புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயம் தொடர்பான அம்சங்களில் ஏகோபித்த – ஐக்கிய – இணக்கப்பாட்டு நிலைமையே காணப்பட்டது. அப்படியிருந்தும் அது முன் நகர முடியாமல் போனமைக்கான காரணங்கள் அல்லது காரணமானவர்கள் போன்ற விடயங்கள் இந்த விவாதத்தினால் பகிரங்கமாக முடியும்.**

**அப்படிப் பகிரங்கமாகும் விடயங்களைப் பயன்படுத்தி இந்த விவகாரத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவது சாத்தியமானதா என்பது குறித்தே கவனிக்க வேண்டும்.**

**இனப் பிரச்சினைத் தீர்வு கானல் நீராய்த் தள்ளிப் போகும் காரணங்களை சர்வதேச தரப்புகளுக்கு வெளிவெளியாக அம்பலப்படுத்தும் ஓர் அரங்காக இந்த நாடாளுமன்ற விவாதம் அமைந்தால் அது நல்லதே.**

**எது, எப்படியாயினும், அனைத்துப் பலங்களையும் இழந்து, தீர்வுக்கான முயற்சிகளில் ஏமாற்றத்தின் உச்சியில் நிற்கும் தமிழர் தரப்புக்கு இன்று இருக்கக்கூடிய ஒரே கொழு கொம்பு சர்வதேச ஆதரவுத் தளம் மட்டுமே. அதில் பிரதானமானது நமது பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியான இந்தியா.**

**பாரத தேசம் உட்பட சர்வதேச தளத்தைச் சரியாகக் கையாள்வதன் மூலம் மட்டுமே ஏதேனும் தீர்வுக்கான ஒரு வாய்ப்பை நாம் பெறமுடியும்.**

**அதை மனதில் வைத்துக் கொண்டு – தீர்க்கமான தீர்மானங்களோடு – மேற்படி உத்தேச விவாதத்தை கூட்டமைப்பு அணுக வேண்டும்.**

**அப்படிச் செயற்பட்டால் இத்தகைய விவாதத்தால் பயனுண்டு. இல்லையேல் இலங்கை நாடாளுமன்றத்தின் பத்தோடு பதினொராவது நிகழ்ச்சியாக இந்த விவாதம் கடந்து போகும். அவ்வளவே.**

# தோட்டப் பாடசாலைகள் அபிவிருத்திக்காக இந்தியாவுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை

## விரைவில் கைச்சத்திடக் கோரிக்கை

கொழும்பு, ஜூன் 21

பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள பாடசாலைகள் அபிவிருத்தி செய்வதற்காக இந்தியா அரசால் வழங்கப்படவுள்ள 30 கோடி ரூபா நிதியைப் பெறுவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை விரைவில் கைச்சாத்திடுமாறு கல்வி அமைச்சரிடம், தமிழ் முற்போக்குக்கூட்டணி கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதிநிதிகளுக்கும், கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்துக்குமிடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் பிற்பகல் கல்வி அமைச்சில் நடைபெற்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் அமைச்சர் பழனி திகாம்பரம், மலையக மக்கள் முன்னணியின் தலைவர் அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன், ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவர் வேலுகுமார் எம்.பி. ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்கள் உட்பட பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள குறைந்த வசதிகளைக் கொண்ட பாடசாலைகளை அபிவிருத்திசெய்வதற்காக 30 கோடி ரூபாயை முதலீடு செய்வதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது.

இது தொடர்பில் அந்நாட்டுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு கடந்த 4 ஆம் திகதி அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது.

இந்நிலையிலேயே அந்த உடன்படிக்கையில் விரைவில் கைச்சாத்திடுமாறு கல்வி அமைச்சரிடம் நேரில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதற்கு கல்வி அமைச்சரிடம் இணக்கம் தெரிவித்தார் என வேலுகுமார் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

பெருந்தோட்டப்பகுதிகளிலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். அது தொடர்பான உடன்படிக்கை விரைவில் கைச்சாத்திடப்படும் எனக் கல்வி அமைச்சர் எம்மிடம் உறுதியளித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்கள் ஊடாக, மாவட்டங்களுக்குப் பொறுப்பானவர்களின் கண்காணிப்பின்கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகள் இடம்பெறும்.

குறிப்பாக கண்டி மாவட்டத்தில் கண்டி விவேகானந்தா, குண்டசாலை விவேகானந்தா, அம்பகோட்டை அம்பாள் தமிழ் வித்தியாலயம் உட்பட 5 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படும் – என்றார். (ஐ)

# அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபடுதல் அவசியமானது

## செல்வம் எம்.பி. வலியுறுத்தல்



வவுனியா, ஜூன் 21

எல்லாக் கட்சிகளுக்குள்ளும் ஒரு சிலர் குழப்பவாதிகளாக இருப்பார்கள். அதை விடுத்து எமது மக்களின் விடுதலையை வென்றெடுப்பதற்காக அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கும்போதே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எமக்குள் ஒற்றுமை இல்லையெனில், சிங்களப்பெரும்பான்மைக் கட்சிகள் எமது பிரதேசத்தில் வலுவாகக் கால் ஊன்றுவதற்கான செயற்பாட்டை நாங்கள் செய்திருக்கின்றோம் என்றே எண்ண வேண்டும். தற்போது உள்ள நிலையில் தமிழ்த் தரப்புக்கள் ஒற்றுமையாகச் செயற்படாதுவிடின் வடக்கு – கிழக்கு சிங்கள பெரும்பான்மைக் கட்சிகளிடம் கைமாறும் அபாயம் ஏற்பட்டுள்ளது. தீவிரவாதத் தாக்குதல் மற்றும் புத்த பிக்குகளின் செயற்பாட்டால் எங்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளன. எங்கள் வரலாறுகள், அதற்கான விலைகள் பலவற்றை நாம் கொடுத்துள்ளோம்.

அந்த வகையில், மக்களுக்காகச் செயற்படுகின்றோம் என்று கூறும் அத்தனை கட்சிகளும் ஒற்றுமை என்ற விடயத்தை மனதார ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒற்றுமை ஏற்படாத நிலையில் எங்கள் தேசியப் பிரச்சினை, எங்கள் இனப் பரம்பல், எங்கள் வரலாறு எல்லாம் அழியும் அபாயத்தை நோக்கிச் செல்லும் – என்றார். (ஐ – 100)

# மத்திய சுற்றாடல் அதிகார சபை தலைவராக இசுறு தேவப்பிரிய



கொழும்பு, ஜூன் 21

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவராக முன்னாள் மேல்மாகாண முதலமைச்சர் இசுறு தேவப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அந்தப் பதவியில் இருந்த ஏ.ஜே.எம்.முஸம்மில் மேல்மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டமையை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இசுறு தேவப்பிரிய நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அரச உத்தியோகத்தர்களுக்கான ஆக்கத்திறன் போட்டிகள் நாளையும் நாளைமறுதினமும்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இவ்வாண்டிற்கான வடமாகாண அமைச்சுக்கள், திணைக்களங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களுக்கிடையிலான மற்றும் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டிகள் ஏற்கனவே நடைபெற்ற பயிற்சிப் பட்டறைகளுக்கமைவாக, நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அரச உத்தியோகத்தர்கள் தங்களுக்குப் பொருத்தமான மாவட்டத்திலும், மன்றங்களினூடாக விண்ணப்பித்தவர்கள் மன்றம் அமைந்துள்ள மாவட்டத்திலும்தோற்ற முடியும்.

நாளை சனிக்கிழமை காலை 9.30 மணி – கவிதை, ஓவியம், குறுநாடகவாக்கம்

நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி – பாடலாக்கம், சிறுகதை

* யாழ்ப்பாணம் – யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

* கிளிநொச்சி – மாவட்ட செயலக பயிற்சி நிலையம் – கிளிநொச்சி (டிப்போ சந்தி அருகில்)

* வவுனியா – ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரி, கோவிற்குளம், வவுனியா.

* மன்னார் – மாவட்ட செயலகம் – மன்னார்.

முல்லைத்தீவு – மாவட்டச் செயலகம் – முல்லைத்தீவு.

# அறிவுத் திருக்கோவிலில் யோகா தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன்.21

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளையினால் யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யோகா தினம் கொண்டாடப்படவுள்ளது என அதன் தலைவர் அறிவித்துள்ளார்.

## நாளை

**22.06.2019**
**சனிக்கிழமை**

நட்சத்திரம்: அவிட்டம் மு.இ 9.02 வரை
திதி : பஞ்சமி மு.இ 9.02 வரை
இராகுகாலம் :8.54 – 10.24
சுப நேரம் : 2.54 – 4.24

# மாகாணத் தேர்தல்களை அரசு மிக விரைவில் நடத்தவேண்டும்

## வலியுறுத்துகின்றது கபே

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 21

மாகாண சபைகளுக்கான தேர்தல்களை அரசு விரைவாக நடத்தவேண்டுமென வலியுறுத்தியுள்ள கபே அமைப்பின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் அகமட் மனாஸ் மக்கீன், ஜனநாயக ரீதியான தேர்தல்களை நடத்துவதுதான் ஜனநாயகம் என்றும் குறிப்பிட்டார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் சட்டங்கள் தொடர்பில் அரச அலுவலர்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும், பொதுமக்களுக்கும் அறிவூட்டும் பயிற்சிப் பட்டறையொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாட்டிலுள்ள ஒன்பது மாகாண சபைகளில் வடக்கு – கிழக்கு மாகாண சபைகள் உட்பட எட்டுச் சபைகளின் காலம் முடிவடைந்துவிட்டது. ஆக இப்போது உள்ள அந்த ஒரு சபையின் காலமும் முடிவடைய சில மாதங்களே உள்ளன. வடக்கு மாகாண சபை உட்பட மாகாண சபைகளின் தேர்தல் பிற்போடப்பட்டு வருகின்றன. மாகாண சபைகளுக்கான தேர்தல்களை நடத்த அரசு அக்கறையற்று இருக்கின்றது.




நல்லலாட்சி என்று சொல்லிக்கொண்ட இந்த அரசு ஜனநாயகத்தைச் சரியாகப் பிரதிபலிக்கும்போது மாத்திரம் தான் நல்லாட்சி என்று குறிப்பிடலாம். ஆனால் ஜனநாயக ரீதியான தேர்தலை நடத்தாமல் பிற்போடும் இந்த ஆட்சியை நல்லாட்சி என்று கூற முடியாதுள்ளது. ஆகவே ஜனநாயக ரீதியான தேர்தலை நடத்தி ஜனநாயகத்தை நிலைநாட்டவேண்டும்.

தேர்தலைப்பிற்போடுகின்றவேலையை அரசு தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றபோது அரசுக்கு அழுத்தம்கொடுத்துத் தேர்தலை நடத்தவேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கும் இருக்கிறது. ஆனால் அதனை எதிர்க்கட்சிகள் செய்யத் தவறி வருகின்றன.

கடந்த ஒக்ரோபர் மாதம் புதிய அரசு வந்தபோது அந்த அரசை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஜனநாயகத்திற்கு விரோதம் என்றும் சிறுபான்மைக் கட்சிகள் மற்றும் தேசியக் கட்சிகள் எல்லாம் கூறின. ஆனாலும் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாதமை தொடர்பில் அவை ஏதும் கூறாமல் இருக்கின்றமை கவலையாக உள்ளது. – என்றார். (ஐ – 07)

# மருத்துவர் சாபி மீது குற்றச்சாட்டு முன்வைத்த பெண்களைப் பரிசோதிக்க மருத்துவர்கள் குழு

கொழும்பு, ஜூன் 21

குருநாகல் போதனா வைத்தியசாலையின் மருத்துவர் மொகமட் சாபி, கருத்தடை சத்திர சிகிச்சை செய்தார் எனக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்த பெண்களை மருத்துவச் சோதனைக்குட்படுத்த மருத்துவ நிபுணர்கள் மூவர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

சட்ட மருத்துவர் தலைமையில் பெண்ணியல் மருத்துவ நிபுணர் மற்றும் மகப்பேற்று மருத்துவ நிபுணர் அடங்கிய குழுவே நியமிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார்.

முறைப்பாடுகளை முன்வைத்துள்ள பெண்கள், கொழும்பு காசல் மகப்பேற்று மருத்துவமனை மற்றும் கொழும்பு டி சொய்சா பெண்கள் வைத்தியசாலைகளில் சிறப்புப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

பரிசோதனைகளுக்கு உபகரணங்கள் ஏதும் தேவைப்படும் பட்சத்தில், அவற்றை அந்த இரண்டு வைத்தியசாலைகளுக்கும் வழங்குவதற்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதியளித்த நீதிமன்றம், அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

குருநாகல் போதனா வைத்தியசாலையின் மருத்துவர் மொகமட் சாபிக்கு எதிராக முறைப்பாடுகளை முன்வைத்திருந்த 758 பேரிடம் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது. அவர்களில் 601 பெண்கள் மருத்துவரிடம் சிகிச்சை பெற்ற தாய்மார்கள். இது தொடர்பிலான அறிக்கை எதிர்வரும் 7ஆம் திகதி நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் ருவன் குணசேகர தெரிவித்தார். (ஐ)

# லஞ்சம், ஊழல் சட்டங்கள் குறித்து அறிவூட்டும் செயலமர்வு யாழில்

யாழ்ப்பாணம், ஜூன் 21

இலஞ்சம் மற்றும் ஊழல் சட்டங்கள் தொடர்பில் அரச அலுவலர்களுக்கும், அர சியல்வாதிகளுக்கும், பொதுமக்களுக்கும் அறிவூட்டும் பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் அந்த அமைப்பின் யாழ். மாவட்ட இணைப்பாளர் எஸ்.தினேஸ் தலைமையில் யாழ் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் இது நடைபெற்றது.

இதன்போது இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சரத்துக்களை ஆய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சரத் ஜெயமான்ன, கபே அமைப்பின் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர் மொஹமட் மனாஷ் மக்கீன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

இந்த நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச அலுவலர்கள், கபே அமைப் பின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)





# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 21

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**யாழ் பிரதேசத்தில் -**

மருதனார்மடம் ஒரு பகுதி, இணுவில் ஒரு பகுதி, உப்புமடம், கோண்டாவில் புகையிரத நிலைய பிரதேசம், தாவடி, சுதுமலை, பத்தனை, மாப்பியன், இலங்கை வங்கி பிரதேசம் சுன்னாகம், மானிப்பாய் வைத்தியசாலைப்பிரதேசம், கார்கில்ஷ் புட்சிற்றி மானிப்பாய், ஈஞ்சடி வைரவர் கோவலடி, மேதர், மயிலிட்டி ஒரு பகுதி, அராலி வடக்கு, கரப்பிட்டி பிள்ளையார் கோவில் பிரதேசம், சரஸ்வதி பாடசாலை பிரதேசம், ஆலடி, அராலித்துறை, ஐயனார் கோவில் பிரதேசம் ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் -**

புளியம்பொக்கணை, தருமபுரம் கல்மடுநகர், உழவனூர், நெத்தலியாறு, தொட்டியடி, கண்ணகிநகர், விசுவமடு, இலங்கோபுரம், மாணிக்கபுரம், தேராவில் ஒரு பகுதி, விசுவமடு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், கனகபுரம், உருத்திரபுரம், ஜெயந்திநகர், செல்வநகர், உருத்திரபுரம் பலநோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை ஆகிய இடங்களிலும் –

**வவுனியா பிரதேசத்தில் -**

பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் வரை, பட்டாணிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, சுயன் அரிசி ஆலை, அஷ்வி அரிசி ஆலை, ஸ்ரீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, வவுனியா தொழில்நுட்பகல்லூரி ஆகிய பிரதேசங்களிலும், மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# லஞ்ச ஊழல் ஒழிப்பு குறித்து விரைவில் புதிய சுற்றறிக்கை

## பணிப்பாளர் நாயகம் சரத் ஜெயமான்ன தகவல்



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 21

நாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழலை இல்லாதொழிப்பதற்குரிய நடவடிக்கை முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதற்கமைய இலஞ்ச ஊழல் ஒழிப்பு தொடர்பில் விரைவில் புதிய சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட உள்ளதாகவும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான சரத்துக்களை ஆய்வு செய்வதற்கான ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம் சரத் ஜெயமான்ன தெரிவித்தார்.

இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மற்றும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் சட்டங்கள் தொடர்பில் அரச அலுவலர்களுக்கும்,அரசியல்வாதிகளுக்கும், பொதுமக்களுக்கும் அறிவூட்டும் பயிற்சிப்பபட்டறையொன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலஞ்சம் மற்றும் ஊழல்கள் ஒழிப்பதற்கான செயற்திட்டமொன்றை ஆரம்பித்திருக்கின்றோம். நாட்டில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களால் இதன் பணிகளை விரைவாக முன்னெடுப்பதில் சில சிக்கல்கள் ஏற்பட்டு இருந்தன. இவ்வாறான நிலையில் இதன் பணிகளை முழு வீச்சில் முன்னெடுக்கின்ற நடவடிக்கைகளில் தற்போது ஈடுபட்டு வருகின்றோம்.

இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதன் அடிப்படையில் அரச பணியிடங்களில் இடம்பெறும் இலஞ்ச ஊழல் குற்றங்களைத் தடுப்பதற்குக் குழுக்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. இவ்வாறான குழுக்கள் ஊடாக இலஞ்ச ஊழல்களை முழுமையாக கட்டுப்படுத்தவேண்டும். ஆனாலும் இவ்வாறான குற்றங்களில் ஈடுபடுகின்றவர்களுக்கு தண்டனை வழங்குகின்ற அதேநேரத்தில் அவர்களிடம் மன ரீதியான மாற்றங்களைச் செய்வது மிக அவசியம்.

இதனூடாக இலஞ்ச ஊழல்களை ஒழிக்கமுடியும். இதற்கமையவே நாட்டில் இலஞ்ச ஊழலை இல்லாதொழிப்பதற்குரிய செயற்பாடுகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன – என்றார். (ஐ – 07)

## நல்லூர் உற்சவகால

# இசையரங்கில் பங்குகொள்ள விண்ணப்பம்

நல்லூர், ஜூன்.21

நல்லூர் உற்சவ காலத்தை ஒட்டி வருடாந்தம் நடத்தப்படும் தெய்வீக இசையரங்கில் பங்குகொள்ளும் கலைஞர்கள், மன்றங்களுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவத்தினை இளங்கலைஞர் மன்றம் என்ற முகநூலின் ஊடாகப் பதிவிறக்கம் செய்தும், அல்லது இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் அமைந்துள்ள மன்றஅலுவலகத்தில் நேரடியாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும்–

இவ் விண்ணப்பப் படிவத்தினைப் பூர்த்தி செய்து எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் இளங்கலைஞர் மன்றம், சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது நேரடியாகவோ ஒப்படைத்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கால்வாய்க்குள் திடீரென பாய்ந்தது வான் லக்னோவில் ஏழு சிறாரைக் காணோம்!

## 22 பேர் மட்டுமே பத்திரமாக மீட்பு



லக்னோ,ஜுன்21

லக்னோ அருகே கால்வாயில் வான் கவிழ்ந்த விபத்தில் 7 குழந்தைகள் தண்ணீரில் அடித்து செல்லப்பட்ட நிலையில் அவர்கள் பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

உத்தரபிரதேச மாநிலம் லக்னோ அருகே பத்வா கேதா கிராமத்தைச் சேர்ந்த 29 பேர் வானில் ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டு ஊருக்கு நேற்றுமுன்தினம் இரவு திரும்பிக் கொண்டிருந்தனர்.

அப்போது கிராமத்தின் அருகே உள்ள இந்திரா கால்வாயில் உள்ள பாலத்தில் வான் சென்று கொண்டிருந்தது. திடீரென்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த வான் கால்வாய்க்குள் கவிழ்ந்தது.

இதையறிந்த கிராம மக்கள் மீட்பு பணிகளில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து விரைந்து வந்த தேசிய பேரிடர் மீட்பு படையினரும் கால்வாயில் இறங்கித் தண்ணீரில் தத்தளித்தவர்களை மீட்டனர். 22 பேர் வரை இவ்வாறு மீட்டனர்.

ஆனால் 7 குழந்தைகளைக் காணவில்லை. அவர்கள் தண்ணீரில் மூழ்கிய நிலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். மாயமான குழந்தைகள் 5 முதல் 10 வயது உடையவர்கள்.



கால்வாயில் மூழ்கிய குழந்தைகளைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள தேசிய பேரிடர் மீட்பு குழுவினர்.

அவர்களை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது. 7 குழந்தைகளும் தண்ணீரில் மூழ்கி பலியாகி இருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

# தமிழக சட்டசபை 28 இல் கூடுகிறது



சென்னை,ஜுன்21

நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் சட்டமன்றல் இடைத்தேர்தல்களில் தமிழகத்தில் ஆளும் அ.தி.மு.கவுக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் தமிழக சட்டப்பேரவை வரும் 28ஆம் திகதி கூட உள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இந்தக் கூட்டத் தொடரில் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு, உள்ளாட்சி தேர்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை சட்டப்பேரவையில் எழுப்ப எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு உள்ளன.

சுமார் ஒரு மாதம் நடைபெறும் இந்த கூட்டத்தில் மானிய கோரிக்கைகள் மீதான விவாதம் நடைபெற உள்ளது. மறைந்த உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவித்த பின் முதல் நாள் கூட்டம் ஒத்திவைக்கப் படும்.

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை நிலுவையில் உள்ள நிலையில் சட்டசபை கூடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஒரு தேசம், ஒரே தேர்தல்’ மோடியின் புதிய திட்டம்!

## இந்தியா முழுவதிலும் ஒரே சமயத்தில் தேர்தல்

'ஒரு தேசம், ஒரே தேர்தல்' திட்டம் தொடர்பாக ஆராய்வதற்கு பிரதமர் மோடி ஒரு விசேட குழுவை அமைப்பார் என அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்துக்கும், மாநில சட்டசபைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வகை செய்யும், 'ஒரு நாடு, ஒரே தேர்தல்' திட்டத்தை செயல்படுத்த மத்திய அரசு பரிசீலித்து வருகிறது. இது தொடர்பாக பிரதமர் மோடி தலைமையில் அனைத்துக்கட்சி கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தை காங்கிரஸ் உள்ளிட்ட சில எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன. கூட்டத்தில் கலந்துகொண்ட எதிர்க்கட்சி தலைவர்களும், ஒரே நேரத்தில் நாடாளுமன்ற, சட்டசபை தேர்தல்களை நடத்துவது சாத்தியம் இல்லை என்றும், நடைமுறை சிக்கல்கள் பல உள்ளன என்றும் கூறியுள்ளனர். முடிவில் இத்திட்டம் தொடர்பாக ஆராய்வதற்கு ஒரு குழுவை அமைப்பதாக பிரதமர் மோடி அறிவித்தார்.

கூட்டம் முடிந்த உடன் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பேசுகையில், கூட்டத்தில் பங்கேற்ற கட்சிகள் பலவும் ஒரே தேசம், ஒரே தேர்தல் என்பதற்கு ஆதரவு தெரிவித்தன. இடதுசாரி கட்சிகள் உள்ளிட்ட சில கட்சிகள் இதை நடைமுறைப்படுத்துவது குறித்து தங்களது



கவலைகளை வெளியிட்டன, ஆனால் நேரடியான எதிர்ப்பு கிடையாது எனவும் குறிப்பிட்டன. இருப்பினும், இது தொடர்பான பிரச்சினைகளை பிரதமர் மோடி அமைக்கும் குழு ஆராயும். -எனவும் ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் 2022 ஆம் ஆண்டு நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுவது குறித்தும், மகாத்மா காந்தியின் 150 ஆவது பிறந்த நாளை நாடு முழுவதும் கொண்டாடுவது பற்றியும் விவாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க – சீன வர்த்தக மோதலை தனக்குச் சாதகமாக்குகிறது இந்தியா

அமெரிக்கா, சீனா இடையே நிலவி வரும் வர்த்தகப் பிரச்சினையைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தப் பார்க்கின்றது இந்தியா எனக் கூறப்படுகின்றது.

இந்தப் பிரச்சினையினால் குறிப்பாகப் பல ஏற்றுமதி வாய்ப்புகள் தனக்குக் கிட்டும் என இந்தியா எதிர்பார்க்கிறது.

அமெரிக்கா,சீனா ஆகிய இரு நாடுகளுக்கும் சுமார் 350 பொருள்களுக்கான வர்த்தக வாய்ப்பு அதிகரிக்கலாம் என்று இந்திய வர்த்தக அமைச்சகம் கூறியுள்ளது.

அமெரிக்கா சீனாவிடம் இருந்து டீசல் இன்ஜின்கள், நுண்ணுயிர் எதிர்ப்பிகள், செப்புத் தாதுக்கள், எக்ஸ்ரே குழாய்கள் மற்றும் சைலீன், இன்வெர்ட்டர்கள் உள்ளிட்ட பல குறிப்பிட்ட பொருள்களை இறக்குமதி செய்து வந்தது.

இந்த நிலையில் அந்த இடத்துக்கு அமெரிக்காவுக்கு இந்த வகையில் 151 பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும் என்றும், அதேபோன்று சீனாவுக்கு ஏறத்தாழ 203 பொருள்களை ஏற்றுமதி செய்ய முடியும் என்றும் இந்தியா எதிர்பார்க்கிறது.

# தங்கத்தை விட தண்ணீர் உயர்வானது!

சென்னை, ஜுன் 21

தண்ணீரின் தேவையை அனைவரும் உணர்ந்து செயற்படவேண்டும் என பாடகர் எஸ்.பி.பாலசுப்ரமணியம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தண்ணீர் தங்கத்தை விட உயர்வானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சென்னையில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற கூர்கா திரைப்பட விழாவில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், தமிழகத்தில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படுவதற்கு நாம் ஒவ்வொருவரும் தான் காரணம் என்பதை உணரவேண்டும் எனவும் குறிப்பிட்டார். (ஜ)

# வேகமாக உருகுகின்றன இமாலயப் பனிமலைகள்!




இமாலய பனிமலைகளில் மிகப்பெரிய அளவில் பனி உருகிவருவது பனிப்போரின் போது உளவுப்பார்க்க பயன்படுத்தப்பட்ட செயற்கைக்கோள்களின் புகைப்படங்களின் ஊடாகத் தெரியவந்துள்ளது.

அமெரிக்காவின் உளவுப்பார்க்கும் திட்டத்தால் எடுக்கப்பட்ட புகைப்படங்களையும் சமீபத்திய விண்வெளி ஆய்வுகளையும் ஒப்பிட்டு, கடந்த 40 வருடங்களில் இமாலய பனிமலைகளில் உள்ள பனிப்படலம் உருகுவது இரு மடங்காகியுள்ளது என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

2000ஆம் ஆண்டிலிருந்து பனி மலைகளின் உயரம் ஒரு வருடத்தில் சராசரியாக 0.5மீற்றர் என குறைந்து வந்துள்ளதாக ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

இதற்கு பருவநிலை மாற்றமே ஒரு முக்கிய காரணம் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் புகைப்படங்



களின் மூலம் இமாலய பனி மலைகள் எவ்வாறு மாறியுள்ளன என்பது தெளிவாக தெரிகிறது. என கொலம்பியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஜோஷுவா மாரெர் தெரிவித்தார்.

# பத்திரிகையாளர் கசோக்கி கொலையில் சவுதி இளவரசருக்கு தொடர்பு உள்ளதாம்!



பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி கொலையில், சவுதி இளவரசருக்கு தொடர்பு இருப்பதாக கூறி, அவர் மீது ஐ.நா சபை விசாரணை நடத்த வலியுறுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் வசித்த சவுதிப் பத்திரிகையாளர் ஜமால் கசோக்கி , கடந்த ஆண்டு, இஸ்தான்புல் நகரில் உள்ள சவுதி துணை தூதரகத்துக்குச் சென்றபோது, கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார். இதில் சவுதி அரசுக்குத் தொடர்பு இருப்பதாகக் குற்றச்சாட்டு எழுந்த நிலையில், சவுதி அரசு அதனை மறுத்து

## ஐ.நா. அறிக்கையாளர் வெளிப்படையாக அறிவிப்பு

வந்தது. இந்நிலையில், கசோக்கியின் கொலை குறித்து விசாரணை நடத்தி வந்த ஐ.நா சபையின் சிறப்பு அறிக்கையாளர் ஆக்னஸ் காலாமார்ட், சவுதி அதிகாரிகள் முன்னதாகவே திட்டமிட்டு மிருகத்தனமாக கசோக்கியைக் கொலை செய்துள்ளனர் எனத் தெரிவித்தார்.

இதுதொடர்பாக கைது செய்யப்பட்ட 11 பேரிடமும் வெளிப்படை தன்மை மற்றும் நேர்மையான முறையில் விசாரணையில் நடைபெறவில்லை எனக் குறிப்பிட்ட அவர், சவுதி இளவரசர் முகமது பின் சல்மானுக்கும் கசோக்கி கொலையில் தொடர்புள்ளது என்றும், அதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளமையால், ஐ.நா சபை சர்வதேச விசாரணையை மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

# ஜப்பான் நிலநடுக்கத்தில் 21 பேர் படுகாயமுற்றனர்



டோக்கியோ, ஜுன்21

ஜப்பானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 21 பேர் படுகாயம் அடைந்தனர். அங்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

ஜப்பானின் வடகிழக்கு பகுதியில் அமைந்துள்ள யமகட்டா நகரில் செவ்வாய் இரவு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 6.7 புள்ளிகளாக பதிவானது. உள்ளூர் நேரப்படி இரவு 10.22 மணிக்கு ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் பூமிக்கு அடியில் 14 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்ததாக ஜப்பான் புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கம் சில வினாடிகள் நீடித்ததாக தெரிகிறது. அப்போது, வீடுகள், வணிகவளாகங்கள் உள்ளிட்ட கட்டடங்கள் பயங்கரமாக குலுங்கின. இதனால் பீதியடைந்த மக்கள் அலறி அடித்துக்கொண்டு கட்டடங்களை விட்டு வெளியேறினர். பின்னர் அவர்கள் வீதிகளிலும், திறந்தவெளி மைதானங்களிலும் தஞ்சம் புகுந்தனர்.

இந்த நிலநடுக்கம் யமகட்டா அருகே உள்ள நிகாடா, இஷிகாவா, முராகாமி உள்ளிட்ட நகரங்களையும் உலுக்கியது. சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து இந்த நகரங்களில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

உயரமான அலைகள் எழக்கூடும் எனவும், எனவே மக்கள் கடலோர பகுதிகளில் இருந்து விலகி இருக்கும்படியும் எச்சரிக்கப்பட்டது.

எனினும் கடல் கொந்தளிப்புடன் காணப்பட்டபோதும், சுனாமி தாக்கவில்லை. இதையடுத்து இரண்டரை மணி நேரத்துக்குப் பிறகு சுனாமி எச்சரிக்கை திரும்பப்பெறப்பட்டது.

முன்னதாக நிலநடுக்கத்தின்போது, கட்டடங்கள் குலுங்கியமையால் நிலைதடுமாறி கீழே விழுந்ததில் 21 பேர் பலத்த காயம் அடைந்த னர். அவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# மாலியில் வெறியாட்டம் 41 பேர் கொன்று குவிப்பு

## இரு கிராமங்களில் கொலைவெறித் தாக்குதல்

பமாகோ, ஜுன்21

மாலியில் 2 கிராமங்களில் மர்ம நபர்கள் நடத்திய கொலை வெறித் தாக்குதலில் 41 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியில் வேட்டைக்காரர்களான டோகோன் இனத்தவர்களுக்கும், மேய்ச்சல் இன நாடோடிகளான புலானி இனத்தவர்களுக்கும் இடையே அடிக்கடி மோதல்கள் நிகழ்கின்றன.



அண்மையில் நாட்டின் மத்திய பகுதியில், டோகான் இனத்தவர்கள் அதிகம் வாழும் சோபனே – கோவ் கிராமத்துக்குள் ஆயுதம் ஏந்திய குழுக்கள் புகுந்து நடத்திய கொடூர தாக்குதலில் சுமார் 100 பேர் கொன்று குவிக்கப்பட்டனர்.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் மத்திய பகுதியில் உள்ள கங்காபானி மற்றும் யோரோ ஆகிய 2 கிராமங்களுக்குள் செவ்வாய் இரவு ஆயுதம் ஏந்திய குழுக்கள் புகுந்து கொலைவெறித்தாக்குதல் நடத்தின.

துப்பாக்கி உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் கங்காபானி கிராமத்துக்குள் நுழைந்த 100 – க்கும் மேற்பட்டோர், வீடுகளுக்குள் இருந்தவர்களை வெளியே இழுத்து வந்து, கொடூரமாகக் கொலை செய்தனர். மேலும் பல வீடுகளை தீவைத்து எரித்தனர்.

இதில் 17 பேர் கொல்லப்பட்டனர். பின்னர் அவர்கள் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை திருடிக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றனர். பின்னர் யோரோ கிராமத்துக்கு சென்ற அவர்கள் கிராமவாசிகள் 24 பேரை சுட்டுக் கொன்றனர்.

இந்த சம்பவத்துக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பு ஏற்காத நிலையில், இது பயங்கரவாதிகளின் சதிச்செயல் என அரசு தெரிவித்துள்ளது.

# புதிய பிரிட்டிஷ் பிரதமர் தெரிவில் போரிஸ் ஜோன்சன் முன்னணியில்

லண்டன், ஜுன்21

இங்கிலாந்து பிரதமர் தேர்வுக்கான போட்டியில் போரிஸ் ஜோன்சன் 126 வாக்குகளுடன் தொடர்ந்து முதல் இடத்தில் உள்ளார்.

இங்கிலாந்தின் பிரதமரான தெரசா மே பதவி விலகியமையை அடுத்து யார் பிரதமர் என்ற நிலையில், அதற்கான முதல் கட்ட வாக்கெடுப்பில் போரிஸ் ஜோன்சன் முன்னிலை பெற்றிருந்தார். தற்போது இரண்டாவது சுற்றிலும் அவர் முன்னிலையில் உள்ளார்.

ஐரோப்பிய யூனியனிலிருந்து இங்கிலாந்து விலகுவதில் இழுபறி நீடித்து வருவதன் எதிரொலியாக, பிரதமர் பதவியை தெரசா மே சமீபத்தில் இராஜினாமா செய்தார்.

இதனால் பிரதமர் பதவிக்கு ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி எம்.பி.க்களிடையே கடும் போட்டி ஏற்பட்டுள்ளது. இறுதியாக அக்கட்சி



யின் 10 எம்.பி.க்கள், பிரதமர் பதவிக்கான போட்டியில் களமிறங்கினர். இங்கிலாந்து மக்களவையில் கடந்த 13 ஆம் தேதி நடந்த இதற்கான வாக்கெடுப்பில் ஆளும் கொன்சர்வேடிவ் கட்சி எம்.பி.க்கள் பங்கேற்றனர்.

இதில், போரிஸ் ஜோன்சன் அதிகபட்சமாக 114 வாக்குகளையும், வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெரமி ஹன்ட் 43 வாக்குகள் பெற்று இரண்டாவது இடத்தையும், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் மிஷெல் கோவ் 37 வாக்குகள் பெற்று மூன்றாவது இடத்தையும் பிடித்தனர். அடுத்த சுற்றுக்கு வாக்கெடுப்பில் கலந்து கொள்ளக் குறைந்தது 17 வாக்குகளாவது பெற வேண்டும் என்ற நிலையில் மார்க் ஹார்பர், ஆண்ட்ரியா லெட்ஸம், எஸ்தர் மெக்வீ ஆகியோர் அதைவிடக் குறைவான வாக்குகள் பெற்று போட்டியில் இருந்து வெளியேறினர். இதனால் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில் 7 பேர் மட்டுமே பங்கேற்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இரண்டாவது சுற்றுக்கான வாக்கெடுப்பு நடைபெற்றுள்ளது. அதில், போரிஸ் ஜோன்சன் 126 வாக்குகளுடன் முதல் இடத்திலும், ஜெரமி ஹன்ட் 46 வாக்குகளுடன் இரண்டாவது இடத்திலும், மிஷெல் கோவ் 41 வாக்குகளும், ரோரி ஸ்டுவார்ட் 37 வாக்குகளும், சஜித் ஜெவிட் 33 வாக்குகளும் பெற்று அடுத்தடுத்த இடத்தில் உள்ளனர்.

2ஆம் சுற்றுக்கான வாக்கெடுப்பில் 33க்கும் குறைவாக வாக்குகள் பெற்றால் அவர்கள் வெளியேற்றப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டதால், 7 பேரில் டோமினிக் ராப் 30 வாக்குகள் பெற்று வெளியேற்றப்பட்டுள்ளார்.

இரண்டு சுற்றுகளின் வாக்கு எண்ணிக்கை முடிவு பெற்றுள்ள நிலையில், அடுத்தபடியாக அஞ்சல் வாக்கு எண்ணிக்கை முறையில் பிரதமர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

# எகிப்து முன்னாள் அதிபரின் திடீர் மரணம்; விசாரணைக்குக் கோருகிறது ஐ.நா. ஆணையம்

ஜெனீவா, ஜுன்21

எகிப்தின் முன்னாள் அதிபர் மரணம் குறித்து விசாரணை அவசியம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் தெரிவித்துள்ளது.

எகிப்தில் நீண்டகாலமாக சர்வாதிகார ஆட்சி நடத்தி வந்த அதிபர் ஹோஸ்னி முபாரக், பதவியில் இருந்து நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடந்த 2012 ஆம் ஆண்டில் முதல் முறையாக ஜனநாயக முறையில் தேர்தல் நடத்தப்பட்டது. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்று சகோதரத்துவ அமைப்பைச் சேர்ந்த முகமது மோர்சி அதிபரானார்.

ஆனால் ஓர் ஆண்டுக்குள்ளாக முகமது மோர்சிக்கு எதிராகப் போராட்டம் வெடித்தது. எதிர்க்கட்சியினருடன் இணைந்து மக்கள் மாபெரும் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதனை தொடர்ந்து, அப்போதைய ராணுவ மந்திரி அப்தல் பத்தா அல் சிசி தலைமையிலான ராணுவம், மோர்சியை பதவியை விட்டு நீக்கியதுடன், அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தது.

போராட்டத்தில் ஈடுபட்டோரைக் கொல்வதற்கு உத்தரவிட்டார் எனத்



தொடரப்பட்ட வழக்கில், முன்னாள் அதிபர் முகமது மோர்சிக்கு தூக்குத்தண்டனை வழங்கப்பட்டு, பின்னர் 20 ஆண்டுகள் சிறை தண்டனையாகக் குறைக்கப்பட்டது. இந்த நிலையில் பாலஸ்தீன ஹமாஸ் அமைப்பினருக்கும், முஸ்லிம் சகோதரத்துவ அமைப்புக்கும் தொடர்பு இருப்பதாக கூறப்படும் வழக்கு சில தினங்களுக்கு முன் விசாரணைக்கு வந்தது. இதற்காக முகமது மோர்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அப்போது திடீரென அவர் நீதிமன்றிலேயே மயங்கி விழுந்தார். உடனடியாக அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே இறந்து விட்டார் எனத் தெரிவித்தனர்.

முகமது மோர்சியின் மரணம் இயற்கையான மரணம் அல்ல, முழுமையான திட்டமிட்ட கொலை என்று முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பினர் குற்றம் சாட்டுகின்றனர்.

இந்த நிலையில், ஐநா மனித உரிமைகள் கவுன்சில், முகம்மது மோர்சி மரணம் குறித்து சுதந்திரமான விசாரணை அவசியம் என்று தெரிவித்துள்ளது.

காவல் கட்டுப்பாட்டில் இருக்கும் போது ஏற்படும் திடீர் மரணம் குறித்து, பாரபட்சமற்ற, வெளிப்படையான விசாரணையை தன்னிச்சையான அதிகாரம் கொண்ட அமைப்பு விசாரித்து, மரணத்திற்கான காரணத்தை அறிவது அவசியம் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையரின் செய்தி தொடர்பாளர் ருபெர்ட் கோல்விலே தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikathir





ஆக்கம் ; ஸ்ரீ நதிபரன் (யோகா போதனாசிரியர்)


இன்று சர்வதேச யோகா தினம்

# மனித மேம்பாட்டுக்கு வித்திடும் யோகா

இந்தியப் பெருங்கலைகளுள் பழம் பெரும் கலையாக போற்றப்படும் யோகக் கலையானது தற்போது உலகெங்கும் பிரசித்தம் பெற்றுவருகின்ற கலையாக நோக்கப்படுகிறது.

நவீனத்துவம் எனும் பீடிகையுடன் பழைமையை புறமொதுக்கி புதுமைக்கும் மாற்றங்களுக்கும் முக் கியத்துவமளிக்கப்பட்டு வருகின்ற தற்காலத்தில் பழமை குன்றாது நோய் குணப்படுத்தும் தன்மையில் காத்திரமான இடத்தினை இக்கலை பெற்று வருகின்றது.

நவீன மருத்துவத்துறையை விஞ்சுமளவிற்கு உடல், உள ரீதியான குணமாக்க கடினமான அல்லது சவால் நிறைந்த பல்வேறு நோய்களை பக்க விளைவுக ளின்றி குணப்படுத்தியிருப்பது கண்டறியப்பட்டிருப்பதனால் தேசம் கடந்து மேலை நாட்டவர்களும் கூட இக்கலையால் ஈர்க்கப்பட்டு ஆர்வத்துடன் பயின்றொழுகிவருகின்றமை கண்கூடு. காலத்தின் அசைவுகள் மனிதனது எண்ணங்களிலும் சிந்தனைகளிலும் நடத்தைகளிலும் பிரதிபலித்து வருகின்றன. மனித வாழ்க்கையில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாதவை. இருந்தபோதும் மாற்றங்கள் எனும் பெயரில் மனித வாழ்வியல் விழுமியங்களை கருவறுக்கும் செயற்பாடுகள் முனைப்புக் கொள்வதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு முனைப்புக் கொண்டால் உடல், உள, சமூக, சூழல், ஆன்மிக ரீதியான பல்வேறு எதிர்மறையான விளைவுகளையும் அறுவடை செய்ய வேண்டும் என்ற நிதர் சனமும் உணர்தற்குரியது.



இத்தகைய பின்னணியில் தான் தற்காலத்தில் அதிகரித்துவருகின்ற நோய்த்தாக்கங்களானவை மக்களின் நாளாந்த வாழ்வியல் நகர் வுகளை பாதித்து ஆயுளையும் சுருக்கி வருவதனை காண முடிகின்றது.

எவ்வளவுதான் மருத்துவ விஞ்ஞானம் நாளுக்குநாள் முன்னேற்றம் கண்டு நோய்த்தாக்கங்க ளுக்கு பரிகாரம் தேடி நிவர்த்திக்க முற்பட்டாலும் அவை புதுப்புது வடிவில் சன்னதம் கொண்டு மனிதனை தாக்குகின்றனவேயொழிய அவற்றின் தாக்கம் குறைந்தபாடாக தெரியவில்லை.

எமது உடலானது அமைப்பு ரீதியாக ஒன்பது மண்டலங்களாக – தொகுதிகளாக (Systems)பிரிக்கப்படுகின்ற அதேவேளை, தொழிற்பாட்டு ரீதியிலும் இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று இடைத்தொடர்புள்ளவையாகவும் காணப்படுகின்றன. அவை, இரத்த ஓட்ட மண்டலம்(Circulatory System), சமிபாட்டு மண்டலம்;(Reproductive System), இனப்பெருக்க மண்டலம் (Endocrine System), அகஞ்சுரக்கும் மண்டலம் (Respiratory System), சுவாச மண்டலம் (Lymphatic System), நிணநீர் மண்டலம் (Excretory System), கழிவகற்றும் மண்டலம் (Nervous System) நரம்பு மண்டலம் (Musculoskeletal System) மற்றும் எலும்புதசை மண்டலம்(ஆரளஉரடழளமநடநவயடளுலளவநஅ) என ஒன்பது பகுதிகளாக வகுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் உடலில் முக்கியமாக ஐந்து உறுப்புக்கள் காத் திரத்தன்மை பொருந்தியவையாக விளங்குகின்றன.

மூளை, இதயம், கல்லீரல், நுரையீரல்கள் மற்றும் சிறுநீரகங் கள் என்பவையே அவையாகும். ஏனையவை துணை உறுப்புகளாக அமைகின்றன. உடலியற் செயற்பாடானது சங்கிலித்தொடர் போன்றது. ஒரு மண்டலத்திலோ அல்லது ஏதேனும் உறுப்பு ஒன்றிலோ ஏற்படும் பாதிப்பு ஏனையவற்றிலும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லவையாகும்.

இன்றைய காலகட்டத்தில் வேகமெடுத்துவருகின்ற பல் வேறு தொற்றா நோய்களிற்கு, தவறான உணவுப்பழக்கங்கள், இயற்கைக்கு முரணான வாழ்வியல் நடவடிக்கைகள், உடலுழைப்பின்மை, ஓய்வின்மை, தீய பழக்கங்கள் முதலியவை முகாந்திரங்களாக அமைவதுடன் ஆரோக்கியத் திற்கும் வேட்டு வைக்கின்றன.

ஆசனப்பயிற்சிகள் மூலம் உடலின் தொடர்புடைய பகுதிகளுக்கு அதிகமான இரத்தோட்டம் மற்றும் தேவையானளவு பிராணசக்தியும் கிடைப்பதனால் அனுசேபத் தொழிற்பாடுகள் (Metabolism) சிறப்பான முறையில் நடைபெறுகின்றன. எனவே உடலிலுள்ள மிகச்சிறிய அலகாகிய கலங்களிலிருந்து இழையங்கள், அங்கங்கள் மற்றும் தொகுதிகள் வரையான எல்லா அமைப்பு ரீதியிலான குறைகளையெல்லாம் சீர்செய்து அவற்றின் ஒழுங்கான – வினைத்திறனான இயக்கப்பாட்டினை உறுதிப்படுத்த வல்ல நித்திய சிரஞ்சீவியாக இக்கலை மிளிர்கிறது.

தற்காலத்தில் சமூகத்தின் மத்தியில் உளத்தாக்கங்கள் அதிகரித்துவருகின் றமை பற்றி இன்று பலராலும் பிரஸ்தாபிக் கப்பட்டு வருகிறது. குறிப்பாக உள நெருக்கீடுகள்(Stress), மன அழுத்தம் (Depression), பதகளிப்பு (Anxiety) என்பவற்றால் பாதிக்கப்படுவோர் தொகை சடுதியாக அதிகரித்து வருகின்றமை நோக்கத்தக்கது.

எனவே, ஒருவர் உடல், உள, நடத்தை ரீதியாக நன்நிலையிலிருக்கும் போதே அவர் ஆன்மிக நிலையிலும் சிறந்த நிலையை அடையலாம். ஆன்மிகமானது ஆன்மா சம்பந்தப்பட்டது. மனித வாழ்க்கை முழுமை பெறுவதற்கு ஆன்மிகப் பண்புகளை வளர்க்க வேண்டியது முக்கியமானதாகும். இதற்கு நம் முன்னோர்களான சித்தர்கள், யோகிகள் வகுத்துரைத்த சீரிய வாழ்வியல் நெறி நின்று அதாவது ஏனைய யோக முறைகளுக்கெல்லாம் தலையாயதாக திகழும் இராஜயோகம் வலியுறுத்துகின்ற முக்கிய விடயப்பரப்பாகிய அட்டாங்க யோகம் எனும் எட்டு வகையான வாழ்வியற் படிமுறைகளை – வரையறுத்துரைக்கப்பட்ட பயிற்சி முறைகளை தக்க குரு மூலமாக கிரமமாகக் கடைப்பிடித்து ஒழுகினால் வாழ்வின் பூரணத்துவமான நிலையை எய்த முடியும் என்ற கருத்தியல் இராஜ யோகத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே இத்துணை சிறப்பு வாய்ந்த நீண்ட வரலாற்றுப் பாரம்பரியமுடைய இக்கலையை பேணிப் பாதுகாத்து எதிர்கால சந்ததிக்கும் அளிப்பதற்கு அனைவரும் ஈடுபட்டுழைக்க வேண்டியது அவசியமாகும். *

# ஆசனம் செய்வோம்!

## ஆரோக்கியமாக வாழ்வோம்!!

உலக யோகா நாள் ஆண்டு தோறும் ஜுன் 21 ஆம் நாள் கொண்டாடப்படும் என ஐக்கிய நாடுகள் அவை அறிவித்துள்ளது.

ஐயாயிரம் ஆண்டுகள் பழைமை வாய்ந்த யோகா ஆண்டுதோறும் சூன் 21 ஆம் திகதி பன்னாட்டு யோகா தினமாக ஐக்கிய நாடுகள் அறிவித்துள்ளது.

யோகா எனும் பழமையான கலைப் பயிற்சி, மனிதர்களின் வாழ்வில் மன அமைதியை ஏற்படுத்தி, உடலை என்றும் ஆரோக்கியமாக பாதுகாக்கிறது.

### யோகா செய்வதால் கிடைக்கும் நன்மைகள்?

யோகா எனும் தியான பயிற்சியை தினமும் செய்து வருவதால், உடல் மற்றும் மனதளவில் ஒரு வித புத்துணர்ச்சி தன்மையை அளிக்கிறது.

தினமும் யோகப் பயிற்சியை 25 நிமிடங்கள் தொடர்ந்து வந்தால், நம் உட லில் உள்ள ரத்தோட்டம் சீராகி, உடலை எப்போதும் இளமையுடன் வைக்க உதவுகிறது.

உடல் மற்றும் மனதை ஒருங்கிணைந்து செயல்படும் இந்த யோகா பயிற்சியில், சுவாசக் கோளாறுகள் பிரச்சினை ஏற்படாமல் தடுக்கிறது.

யோகாவில் பலவகைகள் உண்டு. இந்த பயிற்சிகளை தினமும் முறையாக செய்து வந்தாலே, அதனுடைய சிறந்த அனுபவத்தை நாம் பெறலாம்.

தினசரி நாம் முறையாக கடைபிடிக்கும் யோகா பயிற்சியினால், நம்முடைய மூளை மற்றும் உடலின் ஆரோக்கியம் மேம்படுகிறது.

யோகா பயிற்சிகள் மூலம் நம் உடலில் சேரும் தேவையற்ற கொழுப்புகள் கரைக் கப்பட்டு, உடல் பருமனால் ஏற்படும் பல பிரச்சினைகளைத் தடுக்கலாம்.

இதயத்தின் ஆரோக்கியத்தை இந்த யோகா பயிற்சியின் மூலம் நாம் பாதுகாக்க முடியும். இது போன்று உடல் உறுப்பிகளின் ஆரோக்கியத்தை பாதுகாக்க, யோகா பயிற்சி மிகவும் சிறந்தது.

### என்றென்றும் இளமைக்கு வழிவகுக்கும் யோகா

எந்த ஒரு கருவியோ, உணவோ, புறவிசையோ எதுவுமில்லாமல், நமது சுய மூலதனத்தில் ரத்தத்தை சுத்திகரித்து, நரம்புகளை முறுக்கேற்றி, தோல்களில் மினுமினுப் போடு கூடிய நிரந்தரமான ஆரோக்கியத்தையும் இளமையையும் தருவது யோகாசன பயிற்சி.

அதற்கு நாம் அளிக்கும் கைமாறு நேரம் ஒதுக்குதலும் பயிற்சி உழைப்பு மட் டுமே. ஆனாலும், அதை சரியாக புரிந்துகொள்ளாததும் சிலர் தவறாக பயிற்சியில் ஈடுபடுவதுமே அது எல்லோரிடமும் இன்னும் பரவாதிருக்க காரணம்.

### யோகாசன முன்னோடிகள்

யோகாசனம் தோன்றியது இந்தியாவில்தான், அதுபோல அது உலகம் முழுவதும் பின்பற்றபடுவதுக்கு இந்தியாவின் முயற்சியால் ஐ.நா அறிவித்தது பொருத்தமே.

யோகா இன்று நேற்று தோன் றியதல்ல, யோகிகள், முனிவர்கள், சித்தர்கள் காலத் தில் இருந்தே, அவர்களுடைய மெய்ஞானத்தால் ஆராய்ந்து கண்டுபிடிக்கப் பாட்டு, கடைப்பிடிக்கப்பட்டு, மக்க ளுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டது தான்.

யோகாவை பொறுத்தவரை சாதாரண உடற்பயிற்சியை போல மனம்போன போக்கில் செய்யக் கூடாது. அது சரியான பயனளிக்காதது மட்டுமல்ல, ஏதாவது தவறுகள் நேரலாம், ஆனாலும் பெரிய பதிப்புகள் வந்துவிடப்போவதில்லை.

எதுவாக இருந்தாலும் யோகாவை நன்கு அறிந்தவர்களை அணுகினால், அது சரிசெய்யக்கூடியதே.

யோகா கற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் அதைப்பற்றி நன்கு அறிந்தவர்கள் துணைகொண்டு செய்வதே சிறந்தது.

யோகாவும் வியாபாரம் ஆகிவிட்ட சூழலில், வசதியில்லாதவர்கள் புத்தகங்களை படித்துவிட்டு செய்கின்றனர். அது சரியான வழியல்லா, அப்படி செய்பவர்கள் அதை சரியாக செய்யாமல், அதனுடைய முழுப்பயனை அடையமுடியாததால் அதில் சிறப்பில்லை என்று விட்டுவிடக்கூடும்.

அது தாவறான முடிவுதான். மேலும் யோகாவை பற்றிவரும் புத்தகங்கள் எல்லாமே சரியென்று சொல்லமுடியாது.

யோகா குருக்களும் எல்லோருமே யோகாவை நன்கு அரிந்தவர்கள் என்றும் சொல்லமுடியாது. அதனால், யோகா கற்றுக்கொள்பவர்கள் தேர்ந்தெடுப்பதில் தெளிவான எச்சரிக்கை தேவை. செய்பவர்களுக்கும் சரி தவறுகளை ஆராயும் மனப்பக்குவம் இருப்பது நல்லது.

### பயிற்சியை அறிவோம்

யோகாசனம் என்பது ஒரு நிலையில் மனதையும் சுவாசத்தையும் நிதானப்படுத்தி 30 வினாடிகளிலிருந்து 2 நிமிடங்கள் வரை இருப்பதாகும். அதுவே ஒரு ஆசனத் திற்கு போதுமானதாகும்.

மூச்சை உள்ளிழுப்பது, வெளியிடுவது, முச்சை உள்ளிழுத்து வைத்துக்கொண்டு அடக்கியிருத்தல், மூச்சை முழுதாக வெளியேவிட்டுவிட்டு நுரையீரலில் காற்று இல்லாது நிலையில் இருத்தல், மூச்சை சாதாரணமாக வைத்திருத்தல் போன்ற, ஐந்து நிலைகள் உண்டு அது ஒவ்வொரு பயிற்சிக்கும் ஏற்ப மாறுபடும்.

ஒரு நாளைக்கு 7 (அ) 8 ஆசனங்கள் மட்டுமே செய்வது நலம். அதிக ஆர்வமிருந் தாலும் 10 ஆசனங்களுக்கு மேல் செய்யத் தேவையில்லை.

அதிக ஆசனங்கள் களைப்பை ஏற்படுத்தும் நமது தினசரி அலுவல்களை கவனிக்கவும் விரைவான இந்த சமுதாயத்தில் இயங்கவும் ஏற்றதாக இருக்காது.

ஆசனங்கள் நூற்றுக்கும் மேல் இருக் கின்றன அவைகளில் மிகக் கடினமான ஆசனங்களும் உள்ளன. யோகாசனம் செய்பவர்கள் சிரமம் உள்ள ஆசனங்களே செய்யக்கூடாது என்று யோகா ஆசிரியர்களே கூறுகின்றனர்.

ஆசனம் செய்வோம்; ஆரோக்கியமாக வாழ்வோம்: *



## லங்கையின் பொருளாதார வளர்ச்சி வேகம் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 21

இந்த வருடத்தின் முதல் காலாண்டு பகுதியில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 3.72 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

விவசாயம், கைத்தொழிற்துறை சேவை ஆகியவற்றில் இந்த வளர்ச்சி இடம்பெற்றுள்ளதாக தொகை மதிப்பு புள்ளிவிவரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## மாடியிலிருந்து வீழ்ந்து ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 21

கொழும்பு, குணசிங்கபுர இலக்கம் 94 பகுதியில் உள்ள கட்டடத் தொகுதி ஒன்றின் மேல் மாடியிலிருந்து கீழ் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த 57 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார். (ஐ)

## வவுனியாவில் ஓட்டோ - பஸ் மோதி 5 மாணவர்கள் உட்பட 6 பேர் காயம்

வவுனியா, ஜூன் 21

வவுனியா கோவில்குளம் சிவன்கோவில் வீதி தபால் சந்திப் பகுதியில் வவுனியா நகர்ப் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற ஓட்டோ பஸ்ஸுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 5 மாணவர்கள் உட்பட ஆறு பேர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் பிற்பகல் இடம்பெற்றது.

வவுனியா நகரிலிருந்து கோவில்குளம் பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களை வீட்டுக்கு ஏற்றிச் சென்ற ஓட்டோ ஒன்று சிவன்கோவில் வீதி தபால் சந்திப் பகுதியில் பயணித்தபோது சிதம்பரபுரம் பகுதியிலிருந்து வவுனியா நோக்கிச் சென்ற பஸ்ஸுடன் மோதி விபத்து ஏற்பட்டது.



இந்த விபத்தில் ஓட்டோச் சாரதி உட்பட ஓட்டோவில் பயணித்த ஐந்து பாடசாலை மாணவர்கள் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கடும் வறட்சியால் திண்டாடும் முல்லைத்தீவு மாவட்ட மக்கள்!

### 13,889 குடும்பங்கள் இதுவரை பாதிப்பு





முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி காரணமாக இதுவரை மூன்று பிரதேச செயலர் பிரிவுகளில் 13,889 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, கரைதுறைப்பற்று, துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களின் விவரங்கள் பதிவாகியுள்ளதுடன் வெலிஓயா, ஒட்டுசுட்டான், மாந்தை கிழக்குப் பிரதேசங்களில் விவரங்கள் திரட்டும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அதன்படி புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் 1967 குடும்பங்களைச் சேர்ந்த 6296 பேரும், கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தில் 10ஆயிரத்து 799 குடும்பங்களைச் சேர்ந்த 33 ஆயிரத்து 797 பேரும், துணுக்காய் பிரதேசத்தில் 1123 குடும்பங்களைச் சேர்ந்த 6ஆயிரத்து 426 பேருமாக மொத்தம் 13,889 குடும்பங்களைச் சேர்ந்த 46,519 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனப் பிரதேச செயலகங்கள் ஊடாகப் பதிவு கிடைக்கப் பெற்றுள்ளது.

அந்தப் பிரதேசங்களில் குடிதண்ணீர் விநியோகம் இடம்பெற்று வருகிறது. வறட்சியின் காரணமாக விவசாயத்தை நம்பி வாழும் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகளும் மேய்ச்சல் தரவைகள் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளன – என்றார். (ஐ)

## வடக்கு சுகாதார தொண்டர்களுக்கு மாகாண ஆளுநர் சாதகமான பதில்

வவுனியா, ஜூன் 21

வவுனியாவில் இடம்பெற்ற சந்திப்பின்போது வடமாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் சாதகமான பதிலை வழங்கியுள்ளார் என வடமாகாணச் சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்தனர்.

வடமாகாண ஆளுநர் சுரேன் ராகவனுடன் சுகாதார தொண்டர்கள் நேற்றுமுன்தினம் கலந்துரையாடிய பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்களின் தலைவி சிவகரன் சுகந்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஆளுநருடன் இடம்பெற்ற சந்திப்பின்போது எமது சுகாதார தொண்டர்களில் 45 வயதைத் தாண்டியவர்கள் பல பேர் வடக்கு மாகாணத்தில் உள்ளனர். அந்த அடிப்படையில் ஆளுநர் எமக்கு சாதகமான



பதிலையே வழங்கியுள்ளார். ஏற்கனவே சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியவர்கள் என்ற ஓர் காரணத்தினால் வயதெல்லையை 50 வயது வரை நீடிக்கலாம் எனத் தெரிவித்திருந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நேர்முகத் தேர்வு இடம்பெற்றது. அந்த நேர்முகத் தேர்வின் புள்ளி அடிப்படையில் தெரிவுகள் இடம்பெறும் என ஆளுநர் தெரிவித்திருந்தார். எனினும் இதில் சுகாதார தொண்டர்கள் யாராவது விடுபடுவார்களாகவிருந்தால் சம்பந்தபட்டவர்களைத் தன்னுடன் கலந்துரையாடுமாறும் ஆளுநர் சாதகமான பதில் வழங்கியிருந்தார். இறுதி முடிவுக்காக வடமாகாண சுகாதார தொண்டர்கள் அனைவரும் காத்திருக்கின்றோம் – என்றார். (ஐ – 100)

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் வடமாகாண ஆளுநருடன் சந்திப்பு






வவுனியா, ஜூன் 21

வவுனியா மாவட்ட நகர மற்றும் பிரதேச சபைகளின் உறுப்பினர்களுக்கும் வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் பிற்பகல் வவுனியா நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்திலுள்ள நகர மற்றும் பிரதேச சபைகளின் தற்போதைய நிலைமைகள், அவற்றினூடாக முன்னெடுத்துள்ள மக்கள் நலச் செயற்பாடுகள் மற்றும் அவற்றை மேற்கொள்ளும்போது முகம் கொடுக்கும் சவால்கள், பிரச்சினைகள் குறித்தும் இந்த கலந்துரையாடலின்போது விரிவாக ஆராயப்பட்டது.

இந்த நிகழ்வில் ஆளுநரின் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், உதவி உள்ளூராட்சி ஆணையாளர், வவுனியா மாவட்ட நகர மற்றும் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## கடும் காற்று வீசும்

கொழும்பு, ஜூன் 21

மேல், சப்ரகமுவ, தென், மத்திய, வடமேல் மற்றும் ஊவா மாகாணங்களின் மேற்குப் பகுதிகளில் மணித்தியாலத்துக்கு, 50 - 60 கிலோமீற்றர் வேகத்தில் கடுங்காற்று வீசக்கூடுமென்று காலநிலை மத்திய நிலையம் சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

காலநிலை மத்திய நிலையம் நேற்றுக் காலை 6 மணிக்கு வெளியிட்டுள்ள இந்தச் சிவப்பு எச்சரிக்கையானது, இன்று காலை 6 மணிவரை செல்லுப்படியாகுமெனத் தெரிவிக்கப்பட்டது.




# உலகக் கிண்ணத் தொடரிலிருந்து வெளியேறியது தென்னாபிரிக்கா!

இம்முறையாவது உலகக்கிண்ணத் தொடரில் சாதிக்கவேண்டுமென்ற ஆசையுடன், உலகக்கிண்ண தொடருக்குள் அடியெடுத்து வைத்த தென்னாபிரிக்கா அணி, உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரிலிருந்து பரிதாபமாக வெளியேறியுள்ளது.

பர்மிங்ஹாம் – எட்ஜ்பஸ்டன் மைதானத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற உலகக்கிண்ணத் தொடரின் 25ஆவது போட்டியில், நியூஸிலாந்து அணியும், தென்னாபிரிக்கா அணியும் மோதின.

எதிர்பார்ப்பு மிக்க இப்போட்டியில், நாணயச் சுழற்சி சுழற்றுவதற்கு முன்னரே மழை குறுக்கிட்டதால், போட்டி 49 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய தென்னாபிரிக்கா அணி, இரண்டாவது ஓவரிலேயே தனது முதல்விக்கெட்டை பறிகொடுத்தது.

குயிண்டன் டி கொக் 5 ஓட்டங்கள் பெற்றிருந்தவேளை, போல்டின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களம்புகுந்த அணித் தலைவர் டு பிளெஸிஸ், சற்று நிதான துடுப்பாட்டத்தைக் கடைபிடித்தாலும், அவரது நிதானம் நெடுநேரம் நீடிக்கவில்லை.

அவரும் 23 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை, லொக்கி பெர்குசனின் பந்து வீச்சில் போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்ததாக ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஹஷிம் அம்லாவும், மிட்செல் சான்ட்னரின் பந்துவீச்சுக்கு ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய எய்டன் மார்கிரம் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து களத்தில் நின்று தாக்குப்பிடித்த ராஸ்ஸி வெண்டர் டஸன், நிதானமான துடுப்பாட்டத்தைக் கடைபிடித்தார்.

வெண்டர் டஸனுடன் ஜோடி சேர்ந்த டேவிட் மில்லர், சற்று ஒத்துழைப்பு வழங்க அணியின் ஓட்ட எண்ணிக்கை சற்று உயர்ந்தது.

எனினும் துரதிஷ்டவசமாக டேவிட் மில்லர், 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இதனையடுத்து களமிறங்கிய என்டில் பெலுக்வாயோ ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இறுதிவரை கிறிஸ் மோறிஸும், ராஸ்ஸி வெண்டர் டஸனும் களத்தில் இருக்க தென்னாபிரிக்கா அணி, 49 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 241 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

2015ஆம்ஆண்டிலிருந்துஇங்கிலாந்தில்முதல்இன்னிங்ஸிற்காகஅணியொன்று பெற்றுக்கொண்ட நான்காவது குறைந்த பட்ச ஓட்ட எண்ணிக்கையாக இந்த ஓட்ட எண்ணிக்கை பதிவானது.

இதன்போது ராஸ்ஸி வெண்டர் டஸன் ஆட்டமிழக்காது 67 ஓட்டங்களையும், கிறிஸ் மோறிஸ் ஆட்டமிழக்காது 6 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூஸிலாந்து அணியின் பந்துவீச்சு சார்பில், லொக்கி பெர்குசன் 3 விக்கெட்டுகளையும், ட்ரென்ட் போல்ட், கொலின் டி கிராண்ட்ஹோம் மற்றும் மிட்செல் சான்ட்னர் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து, 242 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நியூஸிலாந்து அணி, ஆரம்பவிக்கெட்டை மூன்றாவது ஓவரிலேயே இழந்தது.

கொலின் முன்ரோ 9 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை, கார்கிஸோ ரபாடாவின் பந்து வீச்சில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து களம்புகுந்த அணித் தலைவர் கேன் வில்லியம்சன், சிறப்பாக துடுப்பெடுத்தாடி அணியினை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் துரதிஷ்டவசமாக மார்டின் கப்டில், 35 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை, ஹிட் விக்கெட் முறையில் ஆட்டமிழந்து வெளியேறினார். இதனையடுத்து களமிறங்கிய ரோஸ் டெய்லரும், டொம் லதமும் ஒரு ஓட்டத்துடன் ஏமாற்ற, அடுத்து களமிறங்கிய ஜேம்ஸ் நீஸம் 23 ஓட்டங்களுடன் சற்று ஆறுதல் அளித்தார்.

இதன்பிறகு களமிறங்கிய கொலின் டி கிராண்ட்ஹோம், கேன் வில்லியம்சனுடன் இணைந்து 91 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்திருந்தனர். இதன்போது, கொலின் டி கிராண்ட்ஹோம், 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனையடுத்து மிட்செல் சான்ட்னர் மற்றும் கேன் வில்லியம்சன் ஆகியோர் 48.3 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு அணியினை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றனர். இதன் மூலம் நியூஸிலாந்து அணி 4 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

இதன்போது, கேன் வில்லியம்சன் ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களையும், மிட்செல் சான்ட்னர் ஆட்டமிழக்காது 2 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் சதம் அடித்த நான்காவது நியூஸிலாந்து அணி தலைவர் என்ற பெயரை, கேன் வில்லியம்சன் பதிவு செய்தார்.

தென்னாபிரிக்கா அணியின் பந்து வீச்சு சார்பில், கிறிஸ் மோறிஸ் 3 விக்கெட்டுகளையும், என்டில் பெலுக்வாயோ, கார்கிஸோ ரபாடா மற்றும் லுங்கி இங்கிடி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர். இப்போட்டியின் வெற்றியின் மூலம் நியூஸிலாந்து அணி, 9 புள்ளிகளுடன் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.

தென்னாபிரிக்கா அணி, மூன்று புள்ளிகளுடன் ஒன்பதாவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 138 பந்துகளில் 1 சிக்ஸர் 9 பவுண்ரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 106 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட, நியூஸிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் தெரிவு செய்யப்பட்டார்.

தென்னாபிரிக்கா அணி, நியூஸிலாந்து அணியை இறுதியாக எதிர்கொண்ட ஐந்து போட்டிகளிலுமே தோல்வியை தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னதாக 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், காலிறுதி போட்டியுடனேயே நியூஸிலாந்து அணி, தென்னாபிரிக்கா அணியை வெளியேற்றியிருந்தது.

இதனையடுத்து, 2015ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், அரையிறுதியில் நியூஸிலாந்து அணி, தென்னாபிரிக்கா அணியை வெளியேற்றியிருந்தது.

தற்போது இம்முறை குழு நிலைப் போட்டிகளுடனேயே, நியூஸிலாந்து அணி, தென்னாபிரிக்கா அணியை வெளியேற்றியுள்ளது.

இதுவரை உலகக்கிண்ண வரலாற்றில் தென்னாபிரிக்கா அணி, அரையிறுதியை தாண்டியது கிடையாது. இம்முறையாவது சாதிக்க வேண்டுமென்ற ஆசையில் வந்த அந்த அணி, இவ்வாறு துரதிஷ்ட வசமாக வெளியேறியுள்ளமையானது இரசிகர்களைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. (ஐ)

# இங்கிலாந்தை எதிர்கொள்ள இலங்கை தயார்நிலை

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில் பலம்பொருந்திய இங்கிலாந்து அணியை எதிர்கொள்ள இலங்கை அணி தயாராக உள்ளதாக அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் ருமேஷ் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 27ஆவது போட்டியில், இன்று லீட்ஸ் – ஹெடிங்லி மைதானத்தில், இலங்கை அணி, பலம் பொருந்திய இங்கிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இப்போட்டி நடைபெறும் மைதானத்தை




பொறுத்தவரை இந்தமைதானம் இரண்டாவது துடுப்பாட்டத்திற்கே சாதகமாக உள்ளது.

மேலும், இந்த மைதானத்தில் இங்கிலாந்து அணி இறுதியாக விளையாடிய ஆறு ஒருநாள் போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

எனினும், ஹெடிங்லி மைதானத்தில் இங்கிலாந்தினை இறுதியாக வீழ்த்திய அணியாக இலங்கை அணியே உள்ளது. இந்த வெற்றியை இலங்கை அணி 2011ஆம் ஆண்டு பதிவு செய்தது.

எனினும் அப்போதிருந்த இலங்கை அணியை விட, தற்போதுள்ள இலங்கை அணி சற்று பலவீனமான அணியாகவே உள்ளது.

ஆனால் மறுபுறம் இங்கிலாந்து அணி, அப்போதுள்ள அணியை விட தற்போது அசுரபலமடைந்து சிறந்த அணியாக உருவெடுத்துள்ளது.

அத்தோடு, உலகக்கிண்ண தொடரில் சம்பியன் கிண்ணம் வெல்லும் அணிகளிலும் ஒன்றாக கணிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வரிசையை வீழ்த்த அவர்களது பலவீனங்களை கண்டறிந்திருப்பதாக இலங்கை அணியின் பந்துவீச்சு பயிற்சியாளர் ருமேஷ் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், ‘எங்களுக்கு இங்கிலாந்து அணி, மிகவும் பலமான துடுப்பாட்ட வரிசையினை கொண்டிருப்பது தெரியும் அவர்கள் எப்போதும் எதிர்த்தாடவே முனைவார்கள். அவர்களது திட்டம் கடந்த மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான போட்டி போன்று இருக்கும்.

ஆனால் அவர்களிடம் பலவீனங்கள் இல்லை என நினைப்பது தவறு. நாங்கள் அவர்களை பார்த்திருக்கின்றோம். சாதகமான விடயங்களை முழுமையாக பயன்படுத்தும் நோக்கில் உள்ளதால் எங்களுக்கு அவர்கள் எந்தெந்த பகுதிகளில் பலவீனமாக இருக்கின்றார்கள் என்பது தெரியும். அவர்கள் பலவீனமாக இருக்கும் பகுதிகள் குறைவு என்ற போதிலும், அவர்களிடம் இருக்கும் பலவீனத்தை எமக்கு சாதகமாக பயன்படுத்த வேண்டி உள்ளது

மலிங்க இங்கே இருப்பதோடு, அவர் நேற்று முன் தினம் பயிற்சிகளிலும் ஈடுபட தயராகினார். எனினும், அவர் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கு காலநிலை உகந்ததாக இருக்கவில்லை. அவர் கடந்த செவ்வாய் நீண்ட நேரம் விமானப் பயணத்தில் இருந்ததால், எமது முகாமைத்துவம் அவரை உடனடியாகப் பந்துவீசவும் அழைக்கவில்லை. இதுவரை இந்த உலகக் கிண்ணத் தொடரில் அவர் சிறப்பாக செயற்பட்டுள்ளார்.

சில ஓவர்களை அவர் இன்று வீசுவது அவருக்கு அவரின் வழமையான பந்து வீச்சுபாணிக்கு திரும்ப உதவியாக இருக்கும்.

பந்துவீச்சாளர்கள் ஆஸ்திரேலியா அணிக்கெதிரான போட்டியில் சிறப்பாகச் செயற்பட்டிருந்தனர். ஆனால் அவர்களிடம் இருந்து இன்னும் நான் மிக அதிகமாக எதிர்பார்க்கின்றேன். துடுப்பாட்ட வீரர்கள் குறித்து நாம் அதிகம் கதைத்திருக்கின்றோம். நாங்கள் தொடர்ச்சியாக சிறப்பாட்டத்தினை வெளிப்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

அத்தோடு, எங்களையும் நாம் அதிகம் நம்ப வேண்டும். எங்களிடம் ஆற்றல் இருக்கின்றது என்பதை எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும். யாருக்குமே வீணாக ஆட்டமிழப்பது பிடிக்காத ஒன்று. அது எங்களது மனதில் இருக்க வேண்டும். நாம் விளையாடும் ஒவ்வொரு போட்டிகளிலும் எதிர்பார்ப்புடன் இருக்க வேண்டும். அப்போதே விடயங்கள் எமக்குச் சாதகமாக நடக்கும்’ என கூறினார்.

உலகக்கிண்ண வரலாற்றை பொறுத்தவரை இரு அணிகளும் இதற்கு முன்னதாக 10 முறை மோதியுள்ளன. இதில் ஆறு முறை இங்கிலாந்து அணி வெற்றிபெற்றுள்ளது. 4 முறை இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது. (ஐ)




# ஆறு ஓட்டங்களுள் மண் கௌவியது மாலி மகளிர் அணி



ருவாண்டா அணிக்கு எதிராக இடம்பெற்ற ‘ருவென்டி 20’ போட்டி ஒன்றில் மாலி மகளிர் கிரிக்கெட் அணியினர் 06 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்துள்ளனர்.

இந்தப் போட்டியில், வெறும் 04 பந்துகளில் ருவாண்டா அணியானது வெற்றி இலக்கை அடைந்துள்ளது.

ருவாண்டா தலைநகர் கிகாலி சிற்றியில் இடம்பெற்ற ‘கிவிபுகா மகளிர் ருவென்டி 20’ தொடரிலேயே இந்த மோசமான சாதனை பதியப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் மகளிர் ‘ருவென்டி 20’ போட்டிகளின் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக 14 ஓட்டங்கள் பதிவாகியிருந்தன.

ஐக்கிய அரபு எமிரேட்ஷுக்கு எதிராக இவ்வருட ஆரம்பத்தில் பாங்கொக்கில் இடம்பெற்ற போட்டியில் சீன மகளிர் அணி இந்த மோசமான சாதனையைப் படைத்திருந்தது.

இந்தப் போட்டியில் எமிரேட்ஸ் அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து 203 ஓட்டங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்சமயம் 116 பந்துகள் மீதமிருந்த நிலையில், ருவாண்டா அணி மாலிக்கு எதிராகச் சாதனை படைத்துள்ளது.

9 ஓவர்கள் துடுப்பெடுத்தாடியிருந்த மாலி மகளிர் அணி, வெறும் ஆறு ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது.

19 வயதான ருவாண்டாவின் மிதவேகப் பந்துவீச்சாளர் ஜோஷினி ஓட்டங்கள் எதனையும் விட்டுக்கொடுக்காமல் மூன்று விக்கெட்டுக்களைச் சாய்த்துள்ளார். (ஐ)

## கல்முனை வடக்கு செயலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலையிட்டிருப்பதன் மூலம் அது தேவையற்ற முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. இது நியாய மற்ற கோரிக்கை.

– இவ்வாறு நேற்று நாடாளு மன்றத்தில் பேசும்போது குறிப்பிட் டார் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிர ஸின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹரீஸ்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

கல்முனையில் 73 வீத முஸ் லிம்கள் 27 வீத தமிழர்கள் உள்ள னர். நிலத் தொடர்பு இல்லாத தமிழ்ப் பகுதிகளை இணைத்து தனிச் செயலகம் கேட்பதில் நியா யமில்லை. இப்படி எங்களுக்குச் செய்யவேண்டாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எங்களை நெருக்கடியில் தள்ளு கிறது. எங்களுக்கு நீதி வேண்டும் – என்றார். (ஐ)

## அரச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபா சிறப்புப் படிக்கு மேலதிக மாக இந்த வருட இறுதியிலும் சம்பளம் மீளவும் மாற்றியமைக் கப்படும் என்று நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

உதவிச் சுங்க அத்தியட்சகர் களாக 134 பேருக்குப் புதிதாக நியமனம் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்துக் களை வெளியிட்டார்.

ஜூலை முதலாம் திகதி முதல் அரச ஊழியர்களுக்கு 2 ஆயிரத்து 500 ரூபா மேலதிக கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. அத்துடன், இந்த வருட இறுதிப் பகுதியில் அரச ஊழியர்களின் சம்பளம் மீண்டும் திருத்தியமைக்கப்படும்.

சுங்கத் திணைக்களத்தில் கட்டமைப்பு ரீதியான மாற்றங் களை ஏற்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என் றும் நிதியமைச்சர் மங்கள சமர வீர தெரிவித்தார்.

இதேவேளை, இந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதித் தேர்தலும் அடுத்த ஆண்டு நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகளுக் கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ள நிலையில் ஐக்கிய தேசிய முன் னணி அரசின் 2020 ஆம் ஆண் டுக்கான வரவு – செலவுத் திட்டம் தேர்தல்களை இலக்கு வைத்து கவர்ச்சிகரமானதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படும் நிலை யில் நிதி அமைச்சர் இந்த அறி விப்பை வெளியிட்டுள்ளார். (ஐ)

## கல்முனைச் சிக்கல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றக் கட்டத் தொகுதியில் கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கும் பிரதமருக்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின் போது இந்த இணக்கம் ஏற்பட்டது.

இந்தச் சந்திப்பில் உள்நாட் டலுவல்கள், மாகாண சபைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்த னவும் பங்குபற்றினார்.

கூட்டமைப்புத் தரப்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட பெரும்பாலும் அனைத்து எம்.பிக் களும் சந்திப்பில் பங்குபற்றினர். ஈ.சரவணபவன், த.சித்தார்த்தன் கலந்து கொள்ளவில்லை.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை முழு அளவில் இயங்கச் செய்வதன் கட்டாயம் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் விளக்கினர்.

இவ் விடயம் குறித்து முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீமுடன் பேசும் அவசியம் குறித்து பிரஸ் தாபிக்கப்பட்டது. இதையடுத்து, சந்திப்பில் இருந்து பிரதமரும், சுமந்திரன் எம்.பியும் புறப்பட்டுச் சென்று ஹக்கீம் எம்.பியைத் தனியாகச் சந்தித்துப் பேசினர்.

பின்னர் கூட்டத்துக்குத் திரும் பிய இருவரும், தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் முழு அளவில் இயங்கச் செய்வதற்கு ஹக்கீமும் இணங்கியுள்ளார் என்று தெரி வித்தனர்.

தரம் உயர்த்துவதற்கான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுதல் உட்பட உரிய நடவடிக்கைகளை அமைச்சர் வஜிர அபேவர்த்தன விரைந்து எடுப்பார் என்றும் –

அதுபற்றிய பகிரங்க அறிவித் தலை உடனடியாக அவர் வெளி யிடுவார் என்றும் –

கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாத இறுதிக்குள் குறித்த பிரதேச செயலகத்துக்கான எல் லைகளை நிர்ணயம் செய்யும் அறிக்கையை பெற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகத்துக்கு கணக்கு வழக்குகளை பார்ப் பதற்காக அம்பாறை மாவட்ட செயலகத்தில் இருந்து பிரத்தி யேக அதிகாரி ஒருவரை நியமிக்க வும் நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது.

இது தொடர்பான உத்தி யோகபூர்வமான அறிவித்தலை உள்ளூராட்சி மன்றங்கள் அமைச் சர் வஜிர அபேவர்தன இன்று அல்லது நாளை வெளியிடுவார் என்று தமிழ் தேசியக் கூட்டமைப் பின் நாடளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித் துள்ளார்.

அடுத்த மூன்று மாதங்களுக் குள் இப்பிரதேச செயலகம் நிதி, காணி அதிகாரங்களுடன் முழு அளவில் தனித்து இயங்கும் என்று கூட்டமைப்புக்கு உறுதி கூறப்பட்டது. (உ)

## கல்முனை வடக்கைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லான உண்ணாவிரதப் போராட் டம் நேற்று நான்காவது நாளாகவும் தொடர்ந்தது. இந்தப் போராட்டத் துக்கு அத்துரலிய ரத்ன தேரரும் ஆதரவு வழங்கியுள்ளார்.

உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுக்கும் கல்முனை சுபத் திராராம விகாராதிபதி ரன்முத்து கல சங்கரத்ன தேரர், கிழக்கி லங்கை இந்துகுருமார் ஒன்றியத் தலைவரும் கல்முனை முருகன் ஆலயப் பிரதம குருவுமான சிவஸ்ரீ.க.கு.சச்சிதானந்த சிவம் குருக்கள், கல்முனை கிறிஸ்தவ போதகர் அருட்தந்தை கிருபை ராஜா, கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான அழகக்கோன் விஜயரெட்ணம், சந்திரசேகரம் ராஜன் ஆகியோரின் உடல்நிலை மோசமடைந்துள்ளது. எனினும், அவர்கள் போராட்டத்தைத் தொடர் கின்றனர்.

இவர்களுக்கு இந்து, கிறிஸ் தவ மற்றும் பௌத்த சமூகத்தி னர் நேரில் பேராதரவை வழங்கி வருகின்றனர். அந்தவகையில் போராட்ட களத்துக்கு நாடாளு மன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தலைமையிலான குழுவினர் சென்றனர்.

கல்முனை வடக்கு உபபிரதேச செயலகத்தை முழு அதிகாரமும் கொண்ட பிரதேச செயலகமாக உடன் தரமுயர்த்த வேண்டும் எனவும், நியாயமான உண்ணா விரதப் போராட்டத்துக்குத் தாம் முழு ஆதரவு தெரிவிப்பதாகவும் அத்துரலிய ரத்தன தேரர் தலை மையிலான குழுவினர் அங்கு உரையாற்றும்போது தெரிவித் துள்ளனர்.

இதேவேளை,

கல்முனைக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் அத் துரலிய ரத்தன தேரர், முஸ்லிம், தமிழ்ப் பிரதிநிதிகளைச் சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பு நேற்று கல் முனை மாநகர சபையில் மேய ரின் அலுவலகத்தில் இடம்பெற் றது. (ஐ)

## எல்லோரும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவலை தெரிவித்துள்ளனர்.

மகஸின் சிறைச்சாலையில் நீண்ட காலமாகத் தடுத்து வைக் கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதி களை பார்வையிடுவதற்கு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன் நேற் றுக் காலை பத்து மணியளவில் நேரில் சென்றிருந்தார்.

இதன்போதே, அரசியல் கைதி கள் தமது கவலையை வெளியிட் டனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரி வித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் –

மகஸின் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகள் 95 பேர் பயங்கரவாதத் தடைச்சட்டத் தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள் ளார்கள். இவர்களில் இருவருக்கு ஆயுள் தண்டனை அளிக்கப்பட் டுள்ளது. இவ்வாறு தடுத்து வைக் கப்பட்டுள்ளவர்களின் வழக்குகள் கடந்த காலங்களில் ஆமை வேகத்திலேயே முன்னெடுக்கப் பட்டு வந்திருந்தன. இந்நிலை யில் உயிர்த்த ஞாயிறுத் தாக்கு தல்களின் பின்னர் அரச சட்டத் தரணிகளின் பிரசன்னம் வழக்கு தவணைகளில் முறையாக இடம் பெறாதிருப்பதோடு, சில அரச சட்டத்தரணிகளின் கீழ்பணி யாற்றும் கனிஷ்ட சட்டத்தரணி களே பிரசன்னமாகின்றமை யாலும் வழக்குகளை விரைந்து நடத்துவதில் பெரும் நெருக்கடி கள் ஏற்பட்டுள்ளன.

தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறைக் கூடத்துக்கு பாவனைக்கான நீரைப் பெற்றுக்கொள்வதில் பிரச் சினைகள் காணப்படுகின்றன. ஆகவே குழாய்நீர் வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக குழாய்க் கிணறு ஒன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள் ளனர். அத்துடன் அவர்கள் பயன்படுத்தி வந்த மைதானத் துக்குள் பிரவேசிப்பதற்கும், சுற்றுப்புறங்களில் நேரங்களை கழிப்பதற்குமான அனுமதிகள் அண்மைக் காலமாக தடுக்கப்பட் டுள்ளன.

அதேநேரம், சிறைச்சாலை வைத்தியசாலையை விடவும் போதனா வைத்தியசாலைக்குச் செல்வதற்கான பாதுகாப்பையும் அனுமதியையும் பெறுவதிலும் தாமதமான நிலைமைகள் நீடிக் கின்றன. அத்துடன் தாம் போராட் டங்களை முன்னெடுக்கின்ற போது கூட்டமைப்பின் தலைவர் உட்பட அரச தரப்பினர் வாக்குறுதி களைத் தந்து போராட்டங்களைக் கைவிடச் செய்கின்றபோதும் அதன் பின்னர் தமது விடுதலை குறித்து அரசியல் கொள்கை ரீதி யாக முறையான தீர்வொன்று இதுவரை பெற்றுத்தரவில்லை. ஒக்டோபர் அரசியல் புரட்சியின் பின்னர் ஆட்சியமைப்பதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த பத்து நிபந்தனை களில் ஒன்றாகத் தமிழ் அரசியல் கைதிகள் விடயமும் இருக்கின்ற போதும் அதனை நடைமுறைச் சாத்தியமாக்கும் வகையிலான எந்தவொரு செயற்பாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

தற்போது எமது விடுதலை குறித்து எவ்விதமான கவனத்தை யும் எடுப்பதாக இல்லை. பல்வேறு விடயங்களுக்கான தீர்வுகளை பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டபோதும் அவற்றைக் கைவிட்ட காரணத்தால் எமது விடு தலை உள்ளிட்ட பல விடயங்கள் இன்று கிடப்பில் போடப்பட்டுள்ளன. ஆகவே இதற்குரிய பொறுப்பை கூறவேண்டும் என்றும் தமிழ் அரசியல் கைதிகள் கோரிக்கை விடுத்தனர் – என்றார். (ஐ)

## இலங்கையின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பிரேரணை நிறை வேற்றப்பட்டமை தொடர்பில் ஸ்காபறோ ரூஜ் பார்க் தொகுதி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி தனது மகிழ்ச்சியைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளி யிட்டுள்ள அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பல மாத கால கடுமையான முயற்சியின் பின்னரும், உத்தி யோகபூர்வ எதிர்க்கட்சியின் பலத்த எதிர்ப்பின் பின்னரும், கனடா வில் உள்ள கட்சிகள் இந்தப் பிரேரணையை நிறைவேற்று வதற்கு இணங்கியமை எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

முள்ளிவாய்க்காலின் பத்தாம் ஆண்டு நினைவுகூரப்படும் இந்த தருணத்தில் பாதிக்கப்பட்ட தமி ழர்களையும், அட்டூழியங்களில் உயிர் தப்பியோரையும் உலகம் மறந்துவிடவில்லையென்பதை நினைவூட்டுவதால் இது முக்கி யத்துவம் பெறுகிறது. பாதிக்கப் பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு அனைத்துக் கனேடியர்களும் ஒரு குரலாக ஒன்றிணையவேண் டுமென்பதையும் இது கட்சி சார்ந்த விடயம் அல்லவென்பதையும் நாம் இன்று காண்பித்துள்ளோம்.

மே 15, ஜூன் 12 ஆகிய திகதி களில் இந்தப் பிரேரணையைச் சமர்ப்பித்த லிபரல் கட்சி நாடாளு மன்ற உறுப்பினர் ஷோன் சென் (Shaun Chen), என்டிபீ நாடாளு மன்ற உறுப்பினர் ஷெறில் ஹார்ட் காசில் (Cheryl Hardcastle) ஆகி யோருக்கு நான் நன்றியைத் தெரிவிக்கிறேன். இதைப் போன்ற மனித உரிமை விடயங்கள், கட்சி வேறுபாடுகளைக் கடந்து முன் னெடுக்கப்படுவது முக்கியமானது. இந்த விடயம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கவேண் டும். அது சாத்தியமாகாதமை வருத்தத்துக்குரியது.

எனினும், இன்றைய பிரே ரணை, அட்டூழியங்களால் பாதிக் கப்பட்ட ஈழத் தமிழர்களுக்கு ஆதரவை வெளியிடும் வகையில் அமைந்துள்ளதுடன், இலங் கைத் தீவில் நீதி, பொறுப்புக் கூறப்படுதல் ஆகியவற்றுக்கு கனடா தொடர்ந்து இணைந்து பணியாற்றுமென்பதையும் நினைவுபடுத்துகிறது.

இலங்கையில் பொறுப்புக் கூறலை முன்னகர்த்துவதற்கு ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஊடாகவும், பொதுநலவாய நாடு களின் அரசுத் தலைவர்களின் மகாநாட்டின் ஊடாகவும், ஏனைய சர்வதேச மகாநாடுகள் ஊடாக வும் கனடா தொடர்ந்து முக்கிய பங்காற்றி வருகிறது.

நிறைவேற்றப்பட்ட பிரேரணை பின்வருமாறு அமைந்துள்ளது:

இலங்கையில் வன்முறை யாலும், போரினாலும் பாதிக் கப்பட்ட அனைவருக்கும் இரங் கலைத் தெரிவிக்கிறது.

இலங்கையில் முஸ்லிம்களை இலக்கு வைத்து அண்மையில் இடம்பெற்ற வன்முறையைக் கண்டிக்கும் அதேவேளை, அடிப் படை மனித உரிமைகளைப் பாதுகாத்தவாறு இன வெறுப்பை யும், தீவிரவாதத்தையும் எதிர் கொள்வதற்கான முயற்சிகளை அதிகரிக்குமாறு இலங்கை அரசி டம் கோரிக்கை விடுக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் களால் பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குமாறும், மதச் சிறுபான் மையினரின் உரிமைகளைப் பாதுகாக்குமாறும், அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இலங்கை அரசிடம் கோரிக்கை விடுக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சபையின் 30/1 மற்றும் 40/1 ஆகிய தீர்மானங்களின் கீழ் பணிக்கப்பட்ட கடப்பாடுகளை தெளிவாக வரையறுத்த காலத்தி னுள் நிறைவேற்றுமாறு கனேடிய அரசு விடுத்த கோரிக்கையை மீள உறுதிசெய்வதுடன், பொறுப் புக்கூறலை மேற்கொள்வது, சமா தானத்தை ஏற்படுத்துவது, நாட்டில் உள்ள அனைவருக்கும் மத்தி யில் மீளிணக்கத்தை ஏற்படுத்துதல் ஆகியவற்றுக்குக் கனடாவின் ஆதரவை மீள உறுதிசெய்கிறது.

2009 ஆம் ஆண்டில் ஆயுதப் போரின் இறுதிப் பகுதி உள்ளடங் கலாக இலங்கையில் தமிழர்கள் மீது இனப்படுகொலை புரியப்பட்ட தாகக் கூறப்படுவது குறித்து விசா ரணை செய்வதற்கு சுதந்திர மான, சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைக் குமாறு ஐக்கிய நாடுகள் அமைப் பிடம் கோரிக்கை விடுக்கிறது.

இந்தப் பிரேரணையை நாடாளுமன்றத்துக்கு அறிவித்து, 109 ஆம் இலக்க நிலையியல் கட்டளைக்கு அமைவாக இந்த அறிக்கைக்கு விரிவான பதில் ஒன்றை வழங்குமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கிறது. –என் றுள்ளது. (ஐ)

## 'கல்முனை வடக்கு' என...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஸ்லிம் சமூகத்தினர் நேற்று காலை முதல் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின் றனர்.

கல்முனை ஐக்கிய சதுக்க முன்றலில் ஒன்றுகூடியுள்ள அவர்கள், தரமுயர்த்தல் என்ற போர்வையில் இனத்துவ ரீதி யிலும் நிலத் தொடர்பற்ற ரீதியி லும் உருவாக்கப்பட எத்தனிக்கும் பிரதேச செயலகத்தைத் தடை செய்யவேண்டும். கல்முனையைத் துண்டாக்க இடமளியோம். கல் முனை வடக்கு எனத் தனிப் பிர தேசசெயலகம் தமிழருக்கு வேண் டாம். முஸ்லிம்களும் தமிழர் களும் கல்முனைக்குள் ஒன்றாக வாழ்வதையே நாம் விரும்புகின் றோம் என்று தெரிவித்துள்ளனர்.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கல்முனை மாநகர சபையின் மேயர் சட்டத்தரணி ஏ.எம். றஹீப், கல்முனை மாநகர சபையின் முஸ்லிம் உறுப்பி னர்கள், கல்முனை முஸ்லிம் வர்த்தகர்கள், உலமாக்கள் மற் றும் முஸ்லிம் மக்கள் எனப் பல ரும் பங்கேற்றனர். (ஐ)

## நாடாளுமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யென மஹிந்த அமரவீர எம்.பி. ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பியதால் நாடாளுமன்றச் சபை செயற்பாடுகள் சில நிமிடங் கள் இடைநிறுத்தப்பட்டன.

செயற்படாதிருக்கும் அரச நிறுவனங்களுக்கு புத்துயிரளித் தல் தொடர்பான சட்டவரைவு மீதான விவாதம் சபையில் நேற்று நடந்தது. அதன்போது ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பிக்கள் (ஆளுங்கட்சியில்) எவரும் சபை யில் இருக்கவில்லை.

மஹிந்த அமரவீரவின் கோரிக்கையையடுத்து, சபைக்குத் தலைமைதாங்கிக்கொண்டிருந்த குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், சபையை சில நிமிடங்களுக்கு ஒத்திவைத்து கோரம் மணியை ஒலிக்க அனுமதியளித்தார்.

இதனால் அந்தச் சமயத்தில் உரையாற்றிய டக்ளஸ் தேவானந்தா எம்.பி., தனது உரையை இடை நிறுத்தவேண்டியேற்பட்டது.

கோரம் இல்லாமை தொடர்பில் மஹிந்த அமரவீர திடீரென கேள்வியெழுப்பி தனது உரை யைப் பாதிக்கச் செய்தமை தொடர் பில் டக்ளஸ் எம்.பி. எதிர்க்கட்சியி டம் தனது அதிருப்தியை வெளியிட் டாரென அறியமுடிந்தது. (ஐ)

# விஜயகலா, சிறிதரனுக்கு எதிராக நேற்று சமுர்த்திப் பணியாளர்கள் போர்க்கொடி!

## கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு










கிளிநொச்சி, ஜுன் 21

கிளிநொச்சி மாவட்ட சமுர்த்தி உத்தியோத்தர்கள் அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்துடன் இணைந்து நேற்றுக் கண்டன ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர்.

கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமான கண்டன ஆர்ப்பாட்டம் பின்னர் பேரணியாக மாவட்ட செயலகம் வரை சென்றது. அங்கு மாவட்ட அரச அதிபருக்கான மகஜர் மேலதிக மாவட்ட அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் புதிய சமுர்த்தி பயனாளிகளுக்குச் சமுர்த்தி உரித்துச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளின்போது, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தகுதியில்லாதவர்கள் என்று பேசியிருந்தனர் எனக் குற்றம்சாட்டப்பட்டது.

இதற்கு எதிராகவே இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் இராஜங்க அமைச்சர் விஜயகலா, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் ஆகியோருக்கு எதிராகக் கோஷங்களை எழுப்பியதுடன் பதாகைகளையும் தாங்கி இருந்தனர்.

அகில இலங்கை சமுர்த்தி அபிவிருத்தி மற்றும் விவசாய ஆராய்ச்சி உதவி உத்தியோகத்தர் சங்கத்தின் தலைவர் கித்சிறி கமகே, அதன் பொருளாளர், கிளிநொச்சி சமுர்த்திச் சங்கத்தின் தலைவர் ஆகியோர் கருத்து தெரிவிக்கையில் –

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவரும் நிறைவான தகுதியுடன் காணப்படுகின்றனர். அவர்கள் அனைவரும் தகுதிகாண் காலம் நிறைவுற்று அதற்கான உறுதிப்படுத்தல் கடிதங்களைப் பெற்று வருகின்றனர் இந்த நிலையில் அவர்களைத் தகுதியில்லை என கூறுவதை நாம் வன்மையாக கண்டிருகின்றோம். இந்த மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மற்றும் இராஜாங்க அமைச்சர் விஜயகலா ஆகியோர் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மீது தங்களின் அரசியல் இருப்புக்காகப் பொய்யான கருத்துக்களைக் கூறுகின்றமையை நிறுத்த வேண்டும்.

அவர்கள் ஒன்றை விளங்கிக்கொள்ளவேண்டும் இலங்கையில் உள்ள எல்லாப் பதவிகளுக்கும் அடிப்படைத்தகுதியுண்டு. அது நாட்டின் சட்டம். சாதாரண சிற்றூழியர்கள் கூட தரம் எட்டில் கல்வி கற்றிருக்க வேண்டும். ஆனால் அரசியல்வாதிகளுக்கு மட்டும் எந்த அடிப்படைக் கல்வித் தகுதியும் கேட்கப்படுவதில்லை. இலங்கையில் உள்ள 225 நாடாளுமன்ற உறுப்பினர்களில் பலர் சாதாரண அடிப்படைத் கல்வித் தகுதியே இல்லாதவர்கள் – என்றனர். (ஐ)

## பாதுகாப்பு தரப்புச் சாட்சியங்களை இரகசியமாகப் பதிவு செய்ய முடிவு

கொழும்பு, ஜுன் 21


சேவையில் உள்ள பாதுகாப்பு அதிகாரிகள், தேசிய பாதுகாப்புடன் தொடர்புடைய விவகாரங்கள் குறித்து சாட்சியம் அளிக்கும்போது, ஊடகங்களை அனுமதிப்பதில்லை என்று, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக விசாரிக்கும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முடிவு செய்துள்ளது.

தெரிவுக்குழுவின் உறுப்பினர்கள் நேற்று முன்தினம் நடத்திய கூட்டத்தின்போது, கடந்தகால அமர்வுகள் தொடர்பாக மீளாய்வு செய்த பின்னர், இந்த முடிவை எடுத்திருப்பதாக அதன் தலைவரும் பிரதிச் சபாநாயகருமான ஆனந்த குமாரசிறி தெரிவித்தார்.

சேவையில் உள்ள சில அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் பதவி நிலைகளையோ அவர்களின் சாட்சியங்களையோ, தெரிவுக்குழு பகிரங்கப்படுத்தாது.

அவ்வாறான அமர்வுகள் காணொலிப் பதிவு செய்யப்படும். ஊடகங்களுக்கு அனுமதி அளிக்கப்படாது. என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## நாடாளுமன்றத்தின் பாதுகாப்புக்கு கருவிகள் வழங்கியது சீன அரசு



கொழும்பு, ஜுன் 21

இலங்கை நாடாளுமன்றத்துக்கு 3 கோடி 30 இலட்சம் ரூபா பெறுமதியான பாதுகாப்புக் கருவிகளைச் சீன அரசு கொடையாக வழங்கியுள்ளது.

மூன்று நடமாடும் எக்ஸ்ரே இயந்திரங்கள், மற்றும் உலோகப் பொருள்களைக் கண்டறியும் ஐந்து கருவிகள் அடங்கிய இந்தப் பாதுகாப்புக் கருவிகளை சீனத் தூதுவர் செங் ஷியுவான், நேற்று முன்தினம் சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் கையளித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பணியாளர்கள், ஊடகவியலாளர்கள், விருந்தினர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, இந்தப் பாதுகாப்புக் கருவிகளை, சீனா அவசர அடிப்படையில் இலங்கை நாடாளுமன்றத்துக்கு வழங்கியுள்ளதாக சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அண்மையில் சீனாவுக்கு மேற்கொண்டிருந்த பயணத்தின்போது, சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங் இலங்கைக்கு அவசர நிதியுதவியாக 260 கோடி ரூபாவை வழங்கியிருந்ததுடன், இலங்கையின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தொழில்நுட்ப பயிற்சிகள், பாதுகாப்புக் கருவிகளை வழங்குவதாகவும் உறுதியளித்திருந்தார்.

இதன் அடிப்படையில், இலங்கையின் முப்படைகள் மற்றும் பொலிஸ்துறையைச் சேர்ந்த, 20 மூத்த அதிகாரிகள், சீனாவில் இரண்டு வார காலப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு, ஜுன் 17ஆம் திகதி நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கைப் பொலிஸ்துறைக்கு, சீனா 10 ஜீப் வண்டிகளை வழங்கியிருப்பதுடன், மேலும் 100 ஜீப் வண்டிகளை வழங்கவும் இணங்கியுள்ளது.

தற்போது இலங்கை அரசின் கோரிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில், அவ்வப்போது ஆராய்ந்து நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

சீனா எப்போதுமே இலங்கையை, நல்ல அயலவராக, நல்ல நட்பு பங்காளராக, நல்ல நண்பனாக, நல்ல சகோதரராகவே கருதுகிறது.

சீனாவினால் இலங்கைக்கு அளிக்கப்படும், அனைத்து உதவிகளும் எந்தக் கோர்வைகளாலும் இணைக்கப்படவில்லை. இது சீன மக்களின் நலலெண்ணத்தையே பிரதிபலிக்கிறது என்றும் சீனத் தூதரகம் தெரிவித்துள்ளது.

## வாக்குறுதிகளை வழங்குவதில் ரணில் விக்கிரமசிங்க வல்லவர்

### சாடுகின்றார் அரியநேத்திரன்



மட்டக்களப்பு, ஜுன் 21

கல்முனை பிரதேச செயலகத்தை தரமுயர்த்தும் அமைச்சரவைப் பத்திரத்தை செவ்வாய்க்கிழமை சமர்ப்பிப்பதாகப் பிரதமர் சொல்லியுள்ளார். ஆனால், எந்தச் செவ்வாய்கிழமை என்பதில் அவருக்கும் குழப்பம் உள்ளது. வாக்குறுதி வழங்குவதில் ரணில் விக்கிரமசிங்க வல்லவர் எனத் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்த கோரி நடைபெறும் உண்ணாவிரத போராட்டத்தில் நேற்றுக் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து தெரிவித்தபோதது இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தும் கோரிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நீண்ட காலமாக வைத்து வருகிறது. எனினும், முஸ்லிம் அரசியல்வாதிகள் அதற்குத் தடையாக இருந்து வருகிறார்கள்.

கல்முனையைத் தரமுயர்த்தித் தருவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல தடவை வாக்குறுதியளித்துள்ளார். அவர் வாக்குறுதி வழங்குவதில் வல்லவர். கடந்த 52நாள் அரசியல் குழப்பத்தின்போதும், வாக்குறுதி கொடுத்தார்.

நேற்றுமுன்தினம் கூட்டமைப்பின் எம்.பிக்கள் மாவை, சிறிநேசன் ஆகியோர் பிரதமரைச் சந்தித்து கல்முனை பற்றி அழுத்தம் கொடுத்தனர். வரும் செவ்வாய், அல்லது அடுத்த செவ்வாய் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கவுள்ளதாகப் பிரதமர் வாக்குறுதியளித்துள்ளார்.

இரண்டு செவ்வாய்க்கிழமைகளை ரணில் சொல்லியுள்ளார். ஆனால் எந்தச் செவ்வாய்க் கிழமை என்பது ரணிலுக்கே தெரியாமல் உள்ளது.

இரண்டு செவ்வாய்க்கிழமைகளின் பின்னரும், அவர் தரமுயர்த்தாவிட்டால், கூட்டமைப்பின் ஆதரவை வாபஸ் பெறுவோமென்று எமது எம்.பி, யோகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார். கல்முனையைத் தரமுயர்த்துவதா? ஆதரவை இழப்பதா என்பதை பிரதமர் முடிவு செய்யட்டும்.

ஹரீஸ் எம்.பி என்ற தனி நபரின் வாக்கு வங்கிக்காக மாத்திரமே கல்முனை பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்த எதிர்ப்பு தெரிவிக்கப்படுகிறது. அவருக்காகத் தொடர்ந்தும் தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கை புறக்கணிக்கப்படுமென்றால் பெரும் விளைவுகள் ஏற்படும் – என்றார். (ஐ)

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.06.2019 இல் வெளியிடப்பெற்றது.